[illegible] சித்திரை மீ 1—[illegible]—56 அணா நான்கு

# ஜகன் மோகினி

வை. மு. ஸ்ரீயின்

## தீபஸ்தம்பம்

புதிய தொடர் கதை ஆரம்பம்

மலர் 33 இதழ் 5

★

44
3-56



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - JUL 1956
MADRAS

8L
[illegible] N22.3M
N56. 33.5
83202

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்



# ஜகன்மோகினி



ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி

மே 1956. மலர் 33, இதழ் 5 துன்முகி ௵ சித்திரை

## பொருளடக்கம்.


| | பக்கம் |
|---|---|
| வருகுது! வருகுது! — V. K. பார்த்தஸாரதிஐயங்கார் | 1 |
| பகவத் கீதைக் குறிப்புகள் —ராஜாஜி | 6 |
| புண்ணிய க்ஷேத்திர யாத்திரை —T. S. ராஜகோபாலன் | 9 |
| காளிதாஸர் கனவு —K.S. ராமஸ்வாமி சாஸ்திரி | 14 |
| மதிப்புரை | 16 |
| சமையல் கலை —டி. கமலா | 17 |
| ஜோஸ்யம் பலித்தது —ஸ்ரீநிவாஸ் | 22 |
| கிருஹலக்ஷ்மி —ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் | 25 |
| கண் திறக்கப்பட்டது —M. P. சுகந்தா | 32 |
| என்னருமைத் தந்தை —வை. மு. விஜயலக்ஷ்மி | 38 |
| தலையெழுத்து மாறுமா? —'வ்ருச்சிகம்' | 40 |
| வை. மு. ஸ்ரீயின் 'தீபஸ்தம்பம்'—வை. மு. விஜயலக்ஷ்மி | 1-16 |


### மேலட்டைப் படம்

பையன் :—அப்பா! பக்கத்தாத்து கோபு மாமாவுக்குக் கல்யாணமாம். 5000 ரூபாய் வரதக்ஷிணை வாங்கப் போறாளாம். அதுனாலே எனக்கும் இந்த லீவிலேயே கல்யாணம் பண்ணி 10,000 ரூபாய் வரதக்ஷிணை வாங்கிடுப்பா!....

அம்மா, அப்பா :— அட! வாண்டுப்பயலே........

## க்ஷேமலாபங்கள்

வாசகப் பெரியோர்களுக்கு நமஸ்காரம். உபயகுசலம். என்னருமைத் தந்தையின் இறுதி நாவலாகிய "தீபஸ்தம்பம்" என்கிற கதையை—அவர் சொல்லிய முழுவிவரங்களையும் என் மனதில் வாங்கிக்கொண்டு என் சிற்றறிவுக்கு எட்டிய அளவு உருவாக்கி இவ்விதழில் ஆரம்பித்து, கடவுளுக்கு முதல் முதல் அர்பணம் செய்து வணங்குகிறேன். நான், சின்னஞ்சிறுமி ஆகையினாலே அதில் இருக்கும் குற்றங்குறைகளை மன்னித்து ஆசீர்வதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

என் அரிய பிதாவைப்பற்றிய கட்டுரைகளும், அநுதாபச் செய்திகளும் அன்பர்களிடமிருந்து இன்னும் வந்த வண்ணமாயிருக்கின்றன. பத்திரிகையில் இடமின்மையினால் அவைகளைப் பிரசுரிக்க முடியவில்லை. சென்ற இதழோடு நிறுத்தப்பட்டது. எல்லா அன்பர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வை. மு. வி.



விண்ணாடு ஏகிய வை. மு. ஸ்ரீ.

# வருகுது! வருகுது! தேசிய நலன், நாளை!... க்ஷேமலாபம், பின்னை!

" வாதவர்கோன் 'பின்னை' என்றான்; வத்தவர்கோன் 'நாளை' என்றான்;
யாதவர்கோன், 'யாதொன்றும் இல்லை,' என்றான்;—ஆதலால்,
யாதவர்கோன் பின்னையினும், வத்தவர்கோன் நாளையினும்
யாதவர்கோன் 'இல்லை', இனிது."

## "அவரவர் தமதமது அறிவுறிவு"

இரண்டாம் ஐந்தாண்டு திட்ட முடிவில் க்ஷேமலாப ராஜ்யம் சித்திப்பது நிச்சயம்; சமதர்ம சமூகஸ்தாபனக் கனவு நனவாவது நிச்சயம். என்று குதூகலிக்கின்றனர் தேசியப்ப[illegible] நமது ராஜாங்கத்தினர். ராஜ்யப் புனரமைப்பு திட்டம் திடப்பட்டக்காலே, நாட்டின் சுகம் திடம் பெறும் என்கிறார்கள் பல கட்சித்தலைவர்களும். தொழில் முறைகளனைத்தையும் தேசியமாக்கிவிட்டால்தான், பொருளாதாரநிலை உறுதிப்படும் என்கிறார்கள் தொழில் மந்திரியாதி நிபுணர்கள். ஆதாரப் பள்ளிப் போதனை முறைப்புனருத்தாரணம் வழிப்பட்டால்தான், பகுத்தறிவு வளர்ந்து, குடியரசின் பலன் முடிவுகட்டித் தெரியக்கூடுமென்கிறார்கள் கல்வி நிதியதிகாரிகள். நம் நாட்டில் மதபேதம் ஒழிந்தக்காலே க்ஷேமலாப சமதர்மம் சித்திக்குமென்கின்றனர் மதப் பற்றற்ற அரசாங்கப்பதவியினர். எல்லாம், நாளைக்கும் பின்னையுமாக, வரப்போகிற ஐந்தாண்டு திட்டத்தில் அழுந்தியுள்ளதென்கிற வாக்குறுதியின் பேரில், 'இன்றைக்கு ஏதும் இல்லை' என்றது, பலதுறைக் கஷ்டங்களும் இஷ்டமுடன் நம்மீது சுமத்தப்பட்டுக்கொண்டே போகப்படுவதாகிறது. அரசு எவ்வழி? குடிகள் அவ்வழி, என்பது பெரியோர் வாக்கு. ஆனால், இக்காலத்தில்தான், அரசனும் இல்லை; பெரியோர்வாக்குக்கும் மதிப்பு இல்லையே.

## குடியரசில் நமது ஸமூகம்

குடியரசென்பது, அரசியல் கவனத்தை அப்புறம் வைத்து, குடிகளது இதர எல்லா அலுவல்களையும் தேசியமாக்கித் தோளில் போட்டுத் திராத்திண்டாட்டம் உண்டாக்குவதாகத்தானே ஆகிக்கொண்டுவருகிறது. மதப்பற்றற்ற ராஜாங்கமானதால், நமது முன்னோர்கள் வளர்த்துத்தந்துபோன மகா புனித ஹிந்து மதத்தை, புத்துருவாக்கி, மகரிஷிகள் வகுத்த



OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS

ஹிந்து சமூகத்தை, மதப்பற்றற்ற மதி மந்திரிகளுக்குத் தோன்றும் தர்ம சமூகமாக்க, நமது குடியரசு ராஜ்யத்தில் பிரயாசைகள் நடந்தேறிவருகின்றன. மந்திரிகளும், சட்டசபை தந்திரிகளும், கமிட்டிகளாகக் கூடி, அறிக்கைகளாக விடுத்துக்கொண்டே போகிறார்கள். இக்கமிட்டிகளெல்லாம், பொதுநல விரோத நோய்களைப் பரிசிலனை செய்து அந்நோய்களின் அடிப்படை காரணங்களை ஆராய்ந்தறிந்து, நம்மை அந்நோய்கள் ஏன் பீடித்து வாட்டுகின்றன என்ற ஆராய்ச்சியில் ஆழ்ந்து, தமது அறிவு தெரிந்துகொண்ட முடிவுகளை வெளியிடுவதில்தான் ஈடுபட்டுள்ளன.

**நோய் தீர, சரீரம் ஒழியவேண்டுமோ!**

இவ்வளவும், தேசிய நலனுக்காகவும், க்ஷேமலாப ராஜ்ய அமைப்பிற்காகவும், சமதர்ம சமூக ஸ்தாபனத்திற்காகவும்தான். ஆனால், நோய் தீர்க்கும் மருந்தை ஆராய்ந்து, தெரிந்து, நோய் தீரவேண்டிய சிகித்ஸைகளைச்செய்ய முன்வருவோரைத்தான் காணோம். சரீர மொழிந்தக்காலே நோய்தீரும் என்னுமாப் போலத்தான்போலும், பொதுநல உடல்நோய் தீரும் வகை, 'ஹிந்து மதம்' என்பதே நமது சரிதையில் எடுபட்டு, சமதர்மமதம். என்ற மதப்பற்றற்ற மதந்தான் வரப்போகிறதோ, என்னவோ, இவ்வுழைப்புகள் காரணமாக.

**ராம ராஜ்யத்தில் ராமனுக்கு இடமில்லையா!**

'மிதாக்ஷர வழிமுனை ஏக குடும்பப்பிரியன் நான்', என்ற பீடிகையுடன் தனது புத்திமதிக் கதைகளை இப்பொழுதும் சொல்கிறார் நமது ராஜாஜி. ராஜ்யப் புனரமைப்பு மசோதா, சட்டமாக்கப்படும் இன்றைய நிலையில் வெளிவரும் இவரது புத்திமதிக்கதைகள், முன்னொருகால், இதே ராஜாஜி எழுதிவைத்தபுத்த ஜாதகக் கதைகளை ஞாபகப் படுத்துகின்றன. அதே ராஜாஜீ போற்றி வரும் ராமனையும், நமது மதபபற்றற்ற மத்ய சர்க்காரோ மாகாண சர்க்கார்களோ பாராட்டாது, புறக்கணித்திடச் செய்வதுமல்லாது, இரண்டாயிரத்தி ஐந்நூருவது புத்த ஜயந்தியை, மாபெரும் சரித்திர நிகழ்ச்சியாக்கி, அகில இந்திய விழாவாகக் கொண்டாடி, காமராஜர் தலைமையில், சென்னை மாகாணத்தில் மட்டும் 10,000 ரூபாய் செலவில் விழாக்கொண்டாடச் செய்யும் பலன் தந்ததாயிருக்கிறது. இந்நிலையில், நமது மதப்பற்றற்ற ராஜாங்கத்தார், சமத்வமும், தர்மமும் க்ஷேமலாபராஜ்யமும் வாக்களித்துக்கொண்டே போவது, வாதக்கோன் வாக்களிப்போ, வத்தக்கோன் ஒத்திவைப்போ என்று நினைக்கத்தானே வேண்டியதாயிருக்கிறது!.

**மதப்பற்றற்ற சர்க்காரின் மதப்பற்றற்ற தன்மை**

மதப்பற்றற்ற ராஜாங்கமென்றால் என்ன என்பதும், எல்லாம தேசீயமயமா[illegible]வருவது ஏன் என்பதுவுந்தான் இன்றைய நிலையில், எளிதில் விளங்காத மர்மப்பிரச்னைகளாயுள்ளன. ஹிந்து மதத்தில் மட்டும், மதப்பற்[illegible]ற நமது அரசாங்கம் தலையிட்டு, அப்புராதன மதாசார அனுஷ்டானங்களைச் சட்டதிட்டபூர்வமாக

183202

அகற்றும் புதுதர்ம முண்டாக்கி, பழைய மேடுபள்ளங்கள் போக்கிச் சமமாக்கி, மனுதர்மமாகச் செய்வதுதானா சமதர்ம சமூக ஸ்தாபனம்? புத்தஜயந்திக்கொண்டாட்டத்திற்காக முக் கோடிக்கணக்காய் முக்கோடிப் பொதுமக்கள் பொதுப் பணத் தைச் செலவழித்து, 24-5-56-ஐ, புத்தஜயந்தி விடுமுறை தின முமாக்கி, பலமாதங்கள் முன்புகொண்டே அந்த ஜயந்தி விழாத்திட்டங்கள் நிறுவிவருவதுதானா மதப்பற்றற்ற ராஜாங் கத்தின் மதப்பற்றற்ற தன்மை? நமது இந்துமத ஸ்தாபகர்களான சங்கர, மத்வ, ராமாநுஜாதியர்கள் ஜயந்தி விழா, அந்தந்தப் பிரதேச ராஜாங்கத்தாராவது, விடுமுறை கொண்டாடி, நிறுவப் படலாகாதா, இதே மதப்பற்றற்ற நமது ராஜாங்கத்தாரால்? ராம னுக்கே வழிகாணோமே, ராமாநுசனுக்கு விழாக்கொண்டாட்டமா என்கிறார்கள் ராஜாஜி வழிபற்றிய ராமபக்தர்கள். பலர் வேண்டி யும், ஸ்ரீராமநவமியை, ஹிந்துக்களது முக்கிய விரத பண்டிகை தினமாகக்கொண்டாடிட, விடுமுறை தந்திடத் துணியவில்லையே, சென்னை அரசாங்கமாவது! புத்தரைவிட இராமன் இழிவான தர்மாத்மா வென்பதே மதப்பற்றற்ற சமதர்ம ஸ்தாபனம் நாடும் நமது வருங்கால க்ஷேமலாப அபேக்ஷக அரசாங்க அபிப்ரா யமோ? அல்லது, ராமனைப்பழித்துப் பிரசாரஞ் செய்துவரும் ஈ. வே, ரா. கோஷ்டியினரான தமிழ் மக்கள் மனதைப் புண்படுத் தலாகா தென்ற தேசநல பக்தி காரணமோ?

## புது போதனாமுறையில் மூன்று நிலைகள்!

இந்நிலையில், கல்வி போதனாமுறைப் புனரமைப்பு, இப் பொழுது தலைதூக்கி நிற்கிறது. சுதந்திரம் பெற்றது முதல் நமது நாட்டு ஆதாரக் கல்வி முறையும், உயர்தரக் கல்வி முறையும், வருஷாவருஷம் உருமாறி, இன்னமும் ஓர் நிலையறியாமலே வழி தேடித்தேடி, மாறிமாறி,நீந்திச் செல்வதாகிறது. உயர்தரப்போதனா முறைக் கமிட்டியார் சிபாரிசுகள் வெளிவந்து, பரிசீலனைக்கும் பொதுஜன அபிப்ராயத்திற்கும் ஆதரவு கோரி நிற்கிறது. இதன் படி, இனிவர இருக்கும் போதனாமுறை மூன்று நிலைகள் கொண்ட தாகும். முதல் நிலை: ஆறுவயது முதல் பதினேறு வயதிற்குள் ளாக வேண்டிய ஒருவழிபடுத்தப்பட்ட ஆதாரக் கல்வி போதனா நிலை. இரண்டாவது—மூன்று வருஷகாலம், பல்கலை நோக்கு கொண்ட, உயர்தரப்பள்ளிப்படிப்பு. மூன்றாவதாக—முதலாவது பட்டம் பெறுவதற்கான உயர்தரக் கலாசாலைப்படிப்பு. இப் போதனா முறைகளும் மதப்பற்றற்றதாகத்தான் இருக்கும் போலும்.

## ஸ்ரீ அழகிய சிங்கரும் குருகுல முறையும்

மதப்பற்றற்றவர்கள் நிறுவும் முறையில், மதப்பற்றுக் கலப்பு இருக்கலாகுமோ? இருந்தும், நிதி, கல்வி மந்திரி ஸ்ரீ சுப்ரமணியமும், சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசாவும்,—ஏன், தொழில் மந்திரி, ஸ்ரீ பக்தவத்ஸலமும் கூடத்தான்—, ஸ்ரீமதித்யாதி ஸ்ரீ அஹோபிலம் அழகிய சிங்கராகிய மடாதி பதியைச் சமீபத்தில் தியாகராயநகரில் தரிசித்துப்பேசியதில்

மதப் பற்று மிகுக்காத கல்விக்கு மதிப்புமில்லை, பலனுமில்லையென்பதை ஒப்புக்கொண்டே வந்தனர். கொள்கை ஒன்று, பிரசாரம் ஒன்று, என்பது அரசியல் தர்மம் போலும்! ஆசார மற்ற அனுஷ்டானமும், அனுஷ்டானமற்ற ஆசாரமுந்தான் சமதர்ம சமூக லக்ஷணமோ என்னவோ?. படிப்பு என்பது, பிரஜைகளின் அடிப்படை உரிமையென்பதையும், அதை எவ்விதத்திலும் கட்டுப் படுத்த எந்த அரசாங்கத்திற்கும், எவ்வித அதிகாரமுமில்லையென்ற பெருத்த சட்ட வாதத்தையும் நன்கு வெளிப்படுத்தியுள்ளார் ஸ்ரீமதித்மாதி ஸ்ரீ அஹோபில மடாதிபதி. ப்ரைவேட் காண்டிடேட்கள், பட்டப் பரீக்ஷைகளில் பங்கெடுத்துத் தேரிட அனுமதிக்கப்பட வேண்டுமென, சட்டபூர்வமாக, திடத்துடன வாதித்துள்ளார், ஸ்ரீ அழகிய சிங்கர். குருகுல போதனைமுறையே, அரசாங்கம் தீர்த்திடத் தவித்திடும கிராமப் புனருத்தாரணம், குடிசைத் தொழிலபிவிருத்தி, விவசாய விருத்தி முறை, பொருளாதார விருத்தி போன்ற பல பெருஞ் சிக்கல் பிரச்னைகளைத் தானகப் போக்கி, க்ஷேம லாப ராஜாங்கத்தில், சமதர்ம சமூக ஸ்தாபனஞ் செய்யவல்ல எளிய மார்க்கமெனபதை, ஸ்ரீ அழகிய சிங்கர், சமீபத்தில், தியாகராய நகரில் செய்தருளிய உபன்யாஸத்தில், வெகு தெளிவாகவும், மிக ஆணித்தரமாகவும் விளக்கி வைத்துள்ளனர். மதப் பற்றற்ற ராஜாங்கம், மடாதிபதியின் உபதேசத்தை மதித்து ஆதரிக்க வேண்டுமே! வயிற்றுப் பிழைப்பு தேடிப் பட்டணங்கள் ஓடிவந்தவர்கள், சோற்றுக்குத் தவிக்கும் சிறு தொகை கிராம வாஸிகளிடம் போய், வயிற்றுப் பிழைப்பு வழி உபதேசங்கள் செய்தா கிராமப் புனருத்தாரணமும், குடிசைத் தொழிலபிவிருத்தியும் ஏற்படக்கூடும்? எதற்கும், மே மாதம் 27-29ல், காஞ்சி நகரில், அகில இந்திய ஆதாரக் கல்வி மகாநாடு கூடப் போகிறதாம். சர்வோதய சம்மேளனம் சேரப்போகிறதாம். என்ன நடக்கப் போகிறதோ நாளையும் பின்னையும் பார்ப்போம்!

### அஞ்சும் மூன்றும் சரியானல்........

நாட்டின் பொதுநிலை, சஞ்சலங்களற்று நிலைத்து நிற்குமானல், பொருளாதார விருத்திப் போக்கும் தடங்கலின்றித் தானகப் பெருகுமானல், அப்பொழுதுதான், தாங்கள இட்டுள்ள இரண்டாம் ஐந்தாண்டு திட்ட கால முடிவில், எதிர்பார்க்கும் அளவைவிட எண்பது லக்ஷத்திற்கு மேற்பட்ட அளவில், வேலையில்லாத் திண்டாட்ட நெருக்கடிப் பிரச்னை தீருமென்று உறுதி கூறுகிறுர், நமது க்ஷேமலாபம் நாடும் நமது தொழில் மந்திரிமார். "அஞ்சும் மூணும் சரியானல், அறியாப் பெண்ணும கரியாக்குவள் தான்!"

### புது தொழில் திட்டம்—மூன்று பிரிவுகள்!

தொழில்களை, மூன்று தரத்ததாகப் பிரிக்கப்போகிறுர்களாம்! முதலாவது—. அரசாங்கத்தின் தனிப்பட்ட ஏகதேசப் பொறுப்

புக்கேயான தான வருங்கால விருத்தித் தொழில்கள். இரண்டாவது–புது திட்டங்களை ஆரம்பிப்பதில், அரசாங்கம் அதிக ஊக்கங் காட்டக்கூடிய தொழில் வகைகள்: இதில், தனிப்பட்டோர்க்கும் அவரவர்களுடைய நூதன விருத்தி முயற்சிகளுக்கும் இடம் தரப் படும். மூன்ருவது-இவ்விரண்டிலுங் கலவாத மிகுதித்தொழில்கள்; இவை, தனிப்பட்டோர் வசத்ததேயாகுபவை. இந்தத் தொழில் வகைப்பிரிவு, க்ஷேமலாப ராஜ்ய ஸ்தாபனூர்த்தமான சமூகக் கொள்கைகளைநிறைவேற்ற உதவுவதற்காக, அரசாங்கத்தார்கைக்கொண்டுள்ள ராஜாங்கத் தொழில் திட்டமாம். பொதுநலத் தியாகத் தொண்டாம்!......

இதை அலசிப் பார்த்தீர்களா? தொழில் ஸ்தாபனங்கள் நிருவப்படும் நிமிஷம் முதல், தொழில் நடத்தி, சரக்குகள் உற்பத்தி செய்து, அவைகளை விற்பனை செய்து முடித்திடும்வரை, அரசாங்கக் கண்காணிப்பு இருந்தே வருவதாகிறது. தனிப்பட்டோர் முயற்சி என்பது, 'பிடிக்குப் பிடி நமசிவாயம்' என்பது போல, ஒவ்வோர் நிலையிலும், அரசாங்கம் கேட்கும் வரி விதிகளைக் கொடுத்துக் கொண்டேபோய், லாபம் மிஞ்சினுல், அரசாங்க உத்திரவு பெற்றே அதை எடுத்துக்கொள்வதேயாகிறது. இதுதான், தனிப்பட்டோர், தாம்படும் முயற்சியால் காணப்போகும் பலன். தேசீய திட்ட திமாகம்!—இவ்வளவு கஷ்ட லாபகரமான முயற்சிகளில் தலையிட்டு, எந்தத் தனிப்பட்ட ஸ்தாபனந்தான் பொருளாதார நெருக்கடி தீர்த்து, க்ஷேமலாப ஸ்தாபனஞ் செய்திட முன் வரக்கூடுமோ தெரியவில்லை!

## க்ஷேமமும் லாபமும் யாருக்கு?

மிதமிஞ்சி வளர்ந்தோங்கும் வியாபார வெள்ளத்தை, அது பாய்ந்தோடும் வாய்க்கால்கள் விட்டு விலக்கிட அல்ல, அதுகள் போய் விழுந்து மடங்கக்கூடிய முதலாளித்வ ஆதிக்கத்தை ஒழித்திடவே, சிவபிரான், தன் சடைமீது கங்கையை ஏற்றதுபோல, நமதரசாங்கம், ராஜாங்க வியபார ஸ்தாபனமொன்ற மூலமாக, (State Industry Corporation) தானே ஏற்று, நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வழிகளில், அவ்வியாபார வெள்ளத்தைப் பிரித்துப் பாய்ச்சிவிடப் போகிறதாம். இந்த ஸ்தாபனத்தின் நிதி முதல், ஒரு கோடி ரூபாயாம். இது, 1956 வருஷத்திய இந்திய கம்பெனி சட்டத்தின் கீழானதோர் தனிப்பட்டோர் லிமிடெட் கம்பெனியாம். யோசனையெல்லாம் கேட்க ஒழுங்காய்த்தான் காண்கிறது. ஆனுல், க்ஷேமமும் லாபமும் ராஜாங்கத்திற்கோ? ராஜாங்கத்திலுள்ள பிரஜைகளுக்கோ? நடைமுறையில், நாளையோ, பின்னேயோதான் அறியப்படவேண்டும்! அரசியல் நோய் தீர்க்க வந்துள்ள அதிகார நிபுணர்களே!

'நோய் நாடி, நோய்முத லூடியது தணிக்கும்

வாய் நாடி, வாய்ப்பச் செயல்.'

# பகவத்கீதைக் குறிப்புகள்

## ஸ்ரீ ராஜாஜி

### இரண்டாம் அத்தியாயம்

**சுலோ : 39-40**

கண்ணன் சொல்லுகிருன்: யோகத்தைப் பற்றிச் சொல்லுகிறேன், கேள். யோகம் என்பது கர்ம பந்தத்தில் சிக்கிக் கொள்ளாமல் வாழ்க்கை நடத்தும் வழி. அந்த வழியில் செல்வதில் ஒரு விசேஷம் உண்டு. சாதாரணமாக மருந்து சாப்பிடும்பொழுது பத்தியம் தவறிப் போனுல் நோயாளிக்கு நன்மை உண்டாகாது. அதற்கு மாருக மருந்தினுல் தீமையே ஏற்படும். அதைப்போல் நான் சொல்லும் யோக முறையில் பத்தியம் தவறியதனுல் எந்த விதமான கேடும் உண்டாகாது. யோக நெறியைச் சிறிதளவு கடைப்பிடித்துச் சென்ருலும் அந்த அளவுக்கு நல்ல பயன் உண்டு.

கொசுக்கள் இருக்கும் ஊரில் கொசுவலை போட்டுக் கொண்டு தூங்குவதுபோல் வாழ்க்கையை நடத்தவேண்டும். சரீர யாத்திரைக்கும் சமூக வாழ்க்கைக்கும் வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தாலுங் கூட கர்மபந்தத்தில் சிக்கிக் கொள்ளாமல் கொசுக் கடிக்கு வலைபோட்டுக் கொள்வதுபோல் பாதுகாத்துக்கொண்டிருக்க வேண்டும். அதற்குக் கண்ணன் காட்டிய வழியே வழி.

**சுலோ : 42-46**

'இது வேண்டும்', 'அது வேண்டும்' என்று ஆசைப்பட்டு அதற்காகச் செய்யப்படும் வேண்டுதல்களும் ஹோமங்களும் மற்ற சாதனங்களும் இங்கும் அங்கும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் கீதாசாரியன் அவை வேண்டாம் என்கிருன். அவற்றினுல் நிரந்தரமான பயன் இல்லை என்கிருன்.

**சுலோ : 47-53**

செய்யவேண்டிய காரியங்களை எப்படிச் செய்ய வேண்டும் என்று விளக்குகிருன். பயனைக் கருத வேண்டாம்; கடமைகளைச் செய்வதே உன் வேலை. முடிவு என்னவாகும் என்று சிந்தித்துக் கொண்டு, எந்தக் காரியத்திலும் நீ அதனுல் அடையப் போகும் பிரயோஜனத்தில் மனத்தைச் செலுத்த வேண்டாம். செய்ய வேண்டியதை அவ்வப்போது செய்து கொண்டு போ. பயனைக் கருதிக் காரியம் செய்வது பாமரர்கள் செய்யும் வழி. பயனைக் கருதாமல் கடமையைச் செய்வது யோக மார்க்கம். பயனைக் கருதி

செய்யப்படும் கருமத்துக்கும், நான் சொல்லும் கர்மயோகத்துக்கும் வெகு தூரம். செய்யவேண்டிய கடமைகளைப் பயனைக் கருதாமல் செய்தால் அந்தக் காரியங்களில் கலந்து நிற்கும் நன்மையோ, தீமையோ உன்னை ஒட்டிக் கொள்ளாது. அப்படிக் கடமைகளைச் செலுத்தி வாழ்க்கை நடத்துபவர்கள் மேலான பதவியை அடைவார்கள்.

55-ம் சுலோகம் முதல், அத்தியாயம் கடைசி வரையில் மன அமைதியைப் பற்றி விளக்கம். 'நெஞ்சம் கோடாமை' என்று திருவள்ளுவர், குறள் 8-வது அத்தியாயத்தில் சொல்லும் விஷயமும் 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்று 9வது அத்தியாயத்தில் சொல்லும் விஷயமும் இதில் அடங்கும். மெய், மொழி, மனம், தீ நெறிக்கண் செல்லாம விருப்பது. அடக்கம். 'ஸ்தித பிரக்ஞும்' என்று கீதாசாரியன் சொல்லுவதையே வள்ளுவர்,

**"உரன் என்னும் தோட்டியான்**
**ஓர் ஐந்தும் காப்பான்"**

என்றார்.

புறத்தில் நின்று ஆசைக் காட்டும் விஷயங்களினின்று சுகம் சம்பாதிக்கப் பார்ப்பதைவிட உள்ளத்திற்குள்ளேயே தோன்றும் சுதந்திர சுகத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். சந்தோஷமும் துக்கமும் உள்ளத்தில் உண்டாகின்றன. தன் உள்ளத்தைத் தான் ஆண்டால் துக்கத்தைத் தவிர்த்து ஆனந்தம் தோற்றுவிக்கலாம். புற நிகழ்ச்சிகளால் உண்டாகும் துயரத்தையும் மகிழ்ச்சியையும் அடக்கி ஆளவேண்டும். ஆசை பயம், கோபம் இவற்றை அடக்கியாண்டால் சாந்தி நிலை உண்டாகும். வெறுப்புக்கு இடம் தரலாகாது. துவேஷத்தை அகற்றிவிடவேண்டும். நன்மை, தீமை எது நேரிடினும் நெஞ்சம் கோடாமலிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். எதையும் பொறுத்துக் கொள்ளவேண்டும். ஆமை தன் அங்கங்களை உள்ளே இழுத்துக் கொள்வதைப் போல் ஐம்பொறிகளை உள்ளே இழுத்துக்கொண்டு ஒடுக்க வேண்டும். புலன்களை அடக்கியாண்டு மனத்திலுங் கூட ஆண்டவன் தியானத்தை நிரப்பி விஷயங்களில் மனம் செல்லாமல் பார்த்துக் கொண்டால் விஷய வாசனையும் தீரும். நம்மாழ்வார் சொன்னது இதுவே. **"செற்றது மன்னுறில் அற்று இறை பற்று"** என்றார்.

சுலோ : 60-71

இந்திரியங்களைக் கட்டுப்படுத்தாமல் அஜாக்கிரதையாக இருந்தால் எத்தகையோனும் ஏமாந்து போவான். கடலில் படகைக் காற்று இழுத்துச் செல்வதுபோல் மனத்தை இந்திரியங்கள் இழுத்துப் போகும். அறிவை

இழந்து விடுவான். எனவே, மிகமிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

இந்திரிய விஷயங்களைச் சிந்தனை செய்து கொண்டிருந்தால் அவற்றைப் பற்றி ஆசை உண்டாகி மனத்தைக் கவர்ந்து கொள்ளும். கவர்ந்து நம்மைப் பள்ளத்தில் தள்ளி விடும். அதன்மேல் நாசம் அடைவோம். ஆசை அதிகரிக்க அதிகரிக்கக் கோபமும் புத்தித் தடுமாற்றமும் ஏற்பட்டு முடிவில் கெட்டே போவோம்.

வாழ்க்கை நடத்தும்போது, எப்போதும் ஆண்டவனைத் தியானித்த வண்ணமாக இருந்து கொண்டு, இந்திரியங்களைக் கட்டுப்படுத்தி நடத்தவேண்டும். அப்போதுதான் மனது நிலையில் நிற்கும். உள்ளத்தில் சாந்தம் இருக்கும். சமுத்திரத்தில் எத்தனை நதிகள் விழுந்தாலும் அது கலங்காமல் நிற்கிறது. அதுபோல் பார்ப்பதும், கேட்பதும், அனுபவிப்பதுமான விஷய விவகாரங்கள் எல்லாம் நம்முடைய உள்ளத்தில் கலக்கம் உண்டாக்காமல் வந்தடைய வேண்டும். சித்தம் சமநிலையில் இருக்கவேண்டும்.

சுலோ : 72

மரணத் தறுவாயில் இந்த நிலையை உண்மையில் அடைந்தாலும் போதும். மனிதன் முக்தி அடைவான். இது கீதாசாரியனுடைய வாக்குறுதி.

ஆனபோதிலும் உண்மையில் அந்த நிலையை அடைவது எப்படி? வாழ்நாள் முழுதும் பாபங்கள் செய்து வந்தால் மரணத் தறுவாயில் அந்த மனநிலை ஏற்படுமா? ஏற்படாது. வேஷம் போடலாம். மந்திரங்கள் உச்சரிக்கலாம். பயத்தில் நடுங்கிச் சாகலாம். அவ்வளவே ஒழிய நதிகள் பாய்ந்து விழுந்தாலும் சமுத்திரம் கலங்காமல் நிற்பதுபோல் மனம் கலங்காமல் நிற்கும்நிலை அப்பியாசமின்றி அடைய முடியுமா? ஆண்டவனைச் சரண் புகுந்து முற்றிலும் பாரத்தை அவன்மேல் போடும் பக்தியும் உறுதியான நிச்சயபுத்தியும் உண்டானால் முடியும். அவன் அருள்வான்.


எந்தச் சமயத்தில் மரணம் வரும் என்பது நமக்குத் தெரியாது. ஆனபடியால் அந்தி காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்றிருப்பது புத்திசாலித்தனம் ஆகாது. இந்தக் காரணத்தைக் கொண்டாவது முன்னடியே நிச்சயம் செய்து கொண்டு கீதாசாரியன் காட்டிய வழியில் நடக்க அனைவரும் சரீரத்தில் சக்தி யிருக்கும்போதே ஆரம்பிக்கவேண்டும்.

"அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்" என்று பெரியாழ்வார் அரங்கத்து அரவணைப் பள்ளியானுக்குப் பாடியது இதுவே.

# புண்ணியக்ஷேத்திர யாத்திரை

ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபாலன், பி. ஏ., எல். டி.,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி

மணி சுமார் ஐந்தரை இருக்கும்; ரயில் வண்டி ரிஷீகேஷ் சேர்ந்தது. முதல் பெட்டியிலிருந்து கூட்டமாக இறங்கிய எங்களைப் பார்த்து ஒருவர், "பஸ் தயாராக இருக்கிறது; நீங்கள் தர்மசாலைக்கு வரவேண்டும்" என்றழைத்தார். அவர் கம்பளிவாலா சத்திரத்திலிருந்து வந்தவர். நாங்கள் தங்க ஏற்பாடாகியிருந்த இடம் கம்பளிவாலா தர்மசாலை என்பது; ரிஷீகேஷிலேயே மிகப் பெரிய தர்மசாலையாகும் இது. சுமார் 500 அடி பக்கமுள்ள சதுரமான நிலப்பரப்பில் கட்டப்பெற்ற இது பந்தோபஸ்துடன் கூடியது; விசாலமான அறைகள் 250-க்கு மேல்கொண்டது. இவற்றுள் யாத்ரிகர்கள் தங்குவதற்கும் சமையல் செய்து கொள்வதற்கும் வசதிகள் உள்ளன. ஓரிடத்தில் கோயில் ஒன்று உள்ளது; இதில் எப்போதும் சாதுக்கள்பஜனை செய்து கொண்டிருக்கின்றனர்; சாதுக்கள் எத்தனை பேர் வந்தபோதிலும் அவர்களுக்குக் காலையிலும் மாலையிலும் உணவு இலவசமாக அளிக்கப்படுகிறது. சத்திரத்தையும் அதில் செய்யவேண்டிய தருமங்களையும் நன்கு பரிபாலிப்பதற்காக உத்தியோகஸ்தர் ஒருவர் நியமிக்கப் பெற்றிருக்கிருர்; அவரின் கீழ் குமாஸ்தாக்கள் பலர் உள்ளனர். கம்பளிவாலாவின் சத்திரங்கள் பல, ஆங்காங்கு யாத்ரிகர்களுக்கென பதரிகாச்ரமம் போகும் வழியில் உள்ளன; பதரிகாச்ரமத்திலும் ஒன்று இருக்கிறது.




கம்பளிவாலா சத்திரம்

ரிஷீகேஷில் இம்மாதிரியான சத்திரங்கள் பல உள்ளன. நாட்டிலுள்ள பல பாகங்களிலிருந்தும் பெரியோர் மடங்கள் அமைத்துள்ளனர். வங்காள தேசத்தினருடைய மடங்கள், அஹோபில மடம், தோதாத்ரி மடம்—

இன்னும் பல கங்கையின் கரையிலே உள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்பு மிகச் சிறியதாக இருந்த இந்த ஊர் இப்போது பெரிய பட்டணமாகிவிட்டது.

ரிஷீகேசன் என்பது இறைவனது பெயர்களுள் ஒன்று. இந்தச் சொல்லின் பொருள், இந்திரியங்களுக்கு ஈசன், இந்திரியங்களை அடக்கி ஆளும் ஆற்றல் வாய்ந்தவன் என்பதாம். அவனுடைய பெயரையே இந்தத் தலத்திற்கு இட்டிருக்கின்றனர் பெரியோர். ஐம்பொறிகளை வென்று தவநெறியில் நிற்பதற்கேற்ற வாய்ப்புக்கள் இங்கு உள்ளனவாதலால், இத்தலத்திற்கு இப்பெயர் மிகப் பொருத்தமாகும். இவ்விடத்தில் கங்கை மலையிலிருந்து கீழே பாய்வதால், அதன் வேகம் மிக மிக அதிகம்; பாயும் நிலம் கூழாங்கற்கள் நிரம்பியது. ஆங்காங்கு சிற்றருவிகள் கங்கையில் கலக்கின்றன. கங்கையில் இரு கரைகளிலும் உயர்ந்தோங்கிய மரங்களும், புதர்களும், செடி கொடிகளும் அடர்ந்துள்ளன. மலையின் தாழ்வரைகளில் எங்கும் அடர்ந்த காடுகள்; பள்ளத் தாக்குகளில் தோப்புக்களும் வயல்களும் மலிந்துள்ளன.

கம்பளிவாலா தர்மசாலையிலிருந்து சுமார் 3 மைல் வடக்கே சுவாமி சிவானந்தரது ஆச்ரமம் உள்ளது. ஆச்ரமம் கங்கைக் கரையிலேயேயுள்ளது. இந்த இடத்தில் கங்கையின் வேகம் குறைவு. ஆதலால் யாத்ரீகர்கள் உல்லாசமாக எதிர்க் கரைக்குப் படகில் போகின்றனர். அக்கரையில் கீதா பவனம், ஸ்வர்க்க த்வார-ஆச்ரமம் முதலியன உள்ளன. சிவானந்தரது ஆச்ரமத்தின் அமைப்பைப் பற்றியும் அதில் சிவானந்தர் ஆற்றிவரும் தொண்டினைப் பற்றியும் கூறுவது எளிதல்ல. இவரது ஆச்ரமத்தின் அருகில் இன்னும் சில ஆச்ரமங்கள் உள்ளன. இந்த ஆச்ரமத்திலிருந்து அரை மைல் தொலைவில் லக்ஷ்மண் ஜூலா என்ற இடம் உள்ளது. இந்த இடத்தில் முன்பு லக்ஷ்மணன் தவஞ் செய்ததாகச் சொல்லுகிறார்கள். இதில் உள்ள ஆலயத்தில் ராமன், லக்ஷ்மணன் முதலியோர் வணங்கப் படுகின்றனர்.



லக்ஷ்மண் ஜூலா பாலம்

இந்த இடத்தில் கங்கையில் மேல் தொங்கு பாலம் அல்லது ஊஞ்சற் பாலம் ஒன்று அமைக்கப் பெற்றுள்ளது. இதன் மேல் வண்டிகள் போகக் கூடாது; நடந்துதான் செல்லவேண்டும். பாலத்தில் நடக்கும்போது பாலம் ஆடுகிறது; நடுவில் நின்று பக்கங்களிலுள்ள உயர்ந்த மலைச் சிகரங்களையும், கீழே பொங்கிச் சீறிச் செல்லும் கங்கையையும் பார்த்தால், உடல் நடுக்கம் யாவர்க்கும் எளிதில் ஏற்படும். இந்தப் பாலத்தைக் கடந்துதான் முன்பு மக்கள் பதரிகாச்ரமம் சென்றனர். பாலத்தைக் கடந்து சென்றதும் அக்கரையில் உயர்ந்த கட்டிடங்கள் பலவற்றைக் கண்டோம். அக்கரையில் சுமார் $1\frac{1}{2}$ மைல் வரையில் ஒரே தெருவாகக் கட்டிடங்கள் அமைந்துள்ளன.

கம்பளிவாலா தர்மசாலையின் அருகில் கடைத் தெரு உள்ளது. கடைகளில் ஹரித்வாரில்போல எல்லா வகைப் பண்டங்களும், கறிகாய்களும், பழங்களும் கிடைக்கும். ஸ்நான கட்டம் கடைத் தெருவிலிருந்து அரை பர்லாங்கு தொலைவிலுள்ளது.

நாங்கள் மறுநாட் காலை பதரிகாச்ரமத்திற்குப் போவதாக ஏற்பாடு செய்திருந்தோம். அன்றிரவே மோட்டார் பஸ் சத்தத்தைக் கட்டிவிட்டு, எங்களது மூட்டை முடுச்சுக்களைத் தூக்கிச் செல்லுவதற்காகப் பத்துக் கூலிகளை அமர்த்தினோம். கூலிகள் ஒவ்வொருவரும் சுமார் ஒன்றரை மணங்கு வரையில் (இம்பீரியல் மணங்கு) சுமந்து செல்லலாம்; ஒவ்வொருவருக்கும் பதரிகாச்ரமம் சென்று திரும்பி வரும்வரையில் கூலி ரூ. 80. இந்தக் கூலிகள் மிகவும் நம்பத் தகுந்தவர்கள் என்றும், அவர்களைப் பற்றிச் சிறிதும் பயப்படவேண்டாம் என்றும் எங்களுக்குக் கூறினார், தர்மசாலையின் அதிகாரி. மறுநாட் காலையில் எங்களுக்கு வேண்டியவற்றை மூட்டைகளாகக் கட்டிக் கொண்டு, பெட்டிகள், படுக்கைகள் முதலியவற்றை தர்மசாலையில் ஓர் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு, 9 மணிக்கு போஜனம் முடித்துக்கொண்டோம். 9-30 மணிக்கு எங்களுக்காக இரண்டு பஸ்ஸுகள் தர்மசாலையின் வாயிலில் காத்திருந்தன. நாங்கள் யாவரும் பெரு மகிழ்ச்சியுடன் அவற்றில் ஏறிக்கொண்டோம். பஸ்ஸுகளில் இரண்டு ஓரங்களிலும் அமர்ந்தவர்கள், இயற்கையின் எழிலைக் கண்களால் ஆரப் பருகப் பாக்கியம் பெற்றனர்.

ரிஷீகேஷிலிருந்து பத்ரிநாத் 176 மைல் தொலைவிலுள்ளது. முதல் 136 மைல் மோட்டார் பஸ்ஸில் போகவேண்டும்; மீதியுள்ள 40 மைல் நடந்து செல்லவேண்டும். மோட்டார் கார் செல்லும் மலைப் பாதை மிகவும் குறுகியதாக

லால், பஸ்ஸுகள் ஒரே வரிசையாகச் சென்று ஒரே வரிசையாகத் திரும்பவேண்டும்; ஒன்றையொன்று முந்திச் செல்லவும் முடியாது. ஆகையால் பஸ்ஸுகளின் போக்கு வரத்தைப் பற்றிப் போலீஸ் கட்டுப்பாடு மிகக் கடுமையானது. பஸ்ஸுகள் குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட காலம் வரையில்தான் தங்கவேண்டும். போலீஸாரது ஊதலைக் கேட்டதும் ஏற்படும் பரபரப்பை நேரில் காண வேண்டுமேயன்றி வருணித்தல் சாத்தியமல்ல; பஸ் ஓட்டுபவர், கண்டக்டர்கள்—இவர்கள் ஒரே பாய்ச்சலாகத் தங்களது இடங்களுக்குவிரைகின்றனர்; பிரயாணிகள் தங்கள் தங்களது பஸ்ஸுக்கு ஓடுகின்றனர்; ஒரு நிமிஷத்தில் பஸ் புறப்பட்டு விடுகிறது. காலையில் சுமார் 10 மணிக்குப் புறப்படும் பஸ், மாலையில் சுமார் 4 மணிக்கு 63 மைல் தொலைவிலுள்ள கீர்த்தி நகர் சேருகின்றது. அங்கிருந்து ஸ்ரீநகருக்கு பஸ் கிடையாது. இந்த இரண்டு இடங்களும் கங்கையின் எதிர்க் கரைகளில் உள்ளன; ஒன்றிலிருந்து மற்றதற்குச் செல்லவேண்டில்,தொங்கு பாலத்தைக் கடக்க வேண்டும். மறுநாள் ஸ்ரீநகரிலிருந்து சுமார் 73 மைல் பஸ்ஸில் பிப்பல்கோடிக்குச் சென்று, அங்கிருந்து நடந்து செல்ல வேண்டும்.

பஸ்ஸில் செல்லும்போது நமக்கு வியப்பும் பீதியும் மாறி மாறி நிகழ்கின்றன. சாலையின் ஒரு புறத்தில் வானைக் கிழிக்கும் மலைச் சிகரங்கள், மறுபுறத்தில் பாதாளத்தில் அதிர்ந்து விரையும் கங்கை. சாலை வளைந்து வளைந்து செல்லுகிறது; காடடர்ந்து கறுத்துத் தோன்றும் சரிவுகளில் ரேகைபோல் செல்லும் பாதை, ஆங்காங்கு மலைக்கு மேகலைபோல் விளங்குகின்றது. தாழ்வரைகளில் மக்கள் சிறு கிராமங்களில் வசிக்கின்றனர். விளை நிலங்கள் படிப்படியாக அமைந்துள்ளன; தொலைவிலிருந்து காணும்போது, ஜமக்காளம் வேய்ந்த படிக்கட்டுகள் கொண்ட விளையாட்டரங்குபோல் விளங்குகின்றன. இவற்றின் எழிலை இமையா நாட்டம் பெற்றவர்களும் கண் கொண்டு முகந்து இயம்ப இயலாது. மோட்டார் பாதை மிகவும் குறுகியது. சில இடங்களில் சாலையின் ஓரத்திலேயே பஸ் ஓடும்போது நாம் கொள்ளும் பீதிக்கு எல்லையே இல்லை. பஸ் சிறிது சாலையிலிருந்து சரிந்தால் யாவரும் சேர்ந்து பாதாளத்தில் கங்கையில் விழவேண்டும். சாலையின் திருப்பத்திலும், மலைச் சரிவில் இறங்கும்போதும் மறுநொடியில் நமது நிலை என்ன என்பதைப் பற்றிக் கவலை கொள்ளாதவர் மிகச் சிலரேயாவர். பதரி யாத்திரை ஆரம்பத்திலிருந்து முடிவுவரையில் கவலைக் கிடமானதாகும்; நம்மையும் நம்முடைமையையும் ஈசனிடம் ஒப்புவித்து, யாவும்

இறைவனது திருவருள்படி நடக்கும் என்று துணிவு கொள்வர் சான்றோர். இந்தத் துணிவு இல்லாவிடில் யாத்திரையை நன்கு அனுபவிக்க இயலாது.

எங்களது பஸ்ஸுகள் ரிஷிகேஷின் எல்லையை அடைந்ததும், சுகாதார அதிகாரி, எங்களிடம் காலரா (வாந்திபேதி) தடுப்புக்கான இனகுலேஷன் சர்டிபிகேட் வாங்கிப் பார்த்துவிட்டுத்தான் பஸ்ஸுகளைச் செல்ல அநுமதி செய்தார்; இதனால் சிறிது தாமதம் ஏற்பட்டது. பஸ்ஸுகள் மலைப் பாதையில் சிறிதுதூரம் சென்றதும், சாலைமேல் சிறு கருங்கற் சில்லுகள் மூடியிருப்பதைக் கண்டோம்; இடக்கைப் பக்கத்தில் பார்த்ததும் மலையின் பெரும் பாகம் ஒன்று சரிந்திருப்பதைக் கண்டோம். கூலியாட்கள் விரைவாகச் சாலையைச் சீர் செய்து கொண்டிருந்தனர். எனினும், அந்த இடத்தில் பஸ்ஸைச் செலுத்துவது அபாயகரமாகக்கருதப்பட்டதால், நாங்கள் யாவரும் இறங்கி நடந்தோம், அரை பர்லாங்கு தூரம். அவ்வளவு அகலமான பாதையில் நடக்கும் போதும், மலையின் உயரத்தையும், கங்கையின் ஆழத்தையும் பார்த்ததும் எங்களது தலை கிறுகிறுத்தது. எங்களிற் பெண்பாலர் சிலர் யாத்திரை இடையூறென்று மின்றிப் பூர்த்தியாகவேண்டுமே என்று கவலை கொண்டனர். நாங்கள் பின்னர் பஸ்ஸுகளில் ஏறிக் கொண்டோம்; அவை மேடு பள்ளங்களிலும், சாலைத் திருப்பங்களிலும் விரைந்தன. (தொடரும்)



மலைச்சரிவு; சாலை சீர்படுத்தப் படுகிறது

---

பலகாலமாகக் கைவசம் இல்லாதிருந்த

**வாழ்க்கையின் நாதம் அல்லது வானக் குயில்**

வை. மு. கோ. 41-வது நாவல்

புதிய பதிப்பு] [ரூ. 2-8

---

**ஒவியப்பரிசு**

வை. மு. கோ. 80-வது நாவல்

ரூ. 1-8

## காவிதாஸர் கனவு

### 8. உமாப்ரஸாதம்...குமாரஸம்பவம்

[ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

(பிப்ரவரி இதழ்த் தொடர்ச்சி)

அத்தகைய பெருமை வாய்ந்த கங்கை ஜலம் கூட பரமேச்வரனுடைய அம்சத்தைத் தாங்க முடியவில்லை. அப்பொழுது அங்கு ஆறு கிருத்திகை தேவிகளும் கங்கையில் ஸ்நானம் செய்ய வந்தார்கள். அவர்கள் ஸ்நானம் செய்யவுடன் அந்த ருத்ராம்ச சம்பந்தத்தால் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆண் மகவு பிறந்தது. அவர்கள் அக் குழவிகளைச் சரவணப் பொய்கையில் வைத்தார்கள். அந்த ஆறு குழந்தைகளும் சேர்ந்து ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளும் உடைய குழந்தையாகி விட்டது. அதைக் கங்காதேவி தன முலைப்பாலைப் பருகச் செய்து வளர்த்தாள். அந்தத் தெய்வீகக் குழந்தை பிறந்த ஆறாவது நாள் பரமேச்வரனும் பார்வதியும் விமானத்தில் செல்லும்பொழுது அதைக் கண்டு ஆனந்தமடைந்தார்கள். பார்வதி, "எவருடைய குழந்தை இந்த வெகு அழகிய குழந்தை" என்று பரமேச்வரனை வினவினாள். அப்பொழுது அவர் முறுவலித்து "இது உன் குழந்தை" என்றார். உடனே அவள் மெய் சிலிர்த்தது. மட்டற்ற மகிழ்ச்சி அவளுடைய இதயத்தில் பொங்கிற்று.

புத்ரோத்ஸவே மாத்யதி கானஹர்ஷாத் |

குழந்தையை வாரியெடுத்து உச்சி முகர்ந்து கட்டியணைத்துக் கொண்டு எல்லை கடந்த இன்பத்தை அடைந்தாள். குழந்தையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவினாள். அதை நன்றாகப் பார்ப்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டுமென்று நினைத்தாள்.

ப்ரதோஷ பாஷ்பாகுல லோசனுஸா
 நதம் ததர்ச க்ஷணமக்ர தோபி
பரிஸ்ப்ருசந்தீ கர குட்மலேன
 ஸுகாந்தரம் ப்ராப கிமப்யபூர்வம்
ஸுவிஸ்மயானந்த விகஸ்வராயா :
 சிசிர்களத் பாஷ்ப தரங்கிதாயா:
விவ்ருத்த வாத்ஸல்ய ரஸோத்தராயா :
 தேவ்யாத்ரு சோமர் கோசரதாம் ஜகாம
தமீக்ஷமாணு க்ஷண மீக்ஷணுனும்
 ஷஹஸ்ரமாப்தும் விநிமே ஷமைச்சத்
ஸா நந்தனு லோகன மங்களேஷு
 க்ஷணம் க்ஷணம் திருப்யதிகஸ்யை சேத:
நிஸர்க வாத்ஸல்ய ரஸைகலிக்தா
 ஸாந்திர ப்ரமோதாம்ருத பூரபூர்ணு
தமேக புத்ரம் ஜகதேகமாதா
 ப்யுத்ஸங்கினீ ப்ரஸ்ரவிணீபபூவ

மேருமலையில் வளர்ந்த தங்கக்கொடி தங்கக் கனியுடன் விளங்குவது போலும் ஆகாச கங்கை மலர்ந்த தாமரைப் பூவுடன்

விளங்குவது போலும் கிழக்கு திசை பிறைசந்திரனுடன் விளங்குவது போலும், பார்வதி தேவி அக்குழந்தையுடன் விளங்கினாள்.

ஹைமீபலம் ஹேமகிரேர்லதேவ
விகஸ்வரம் நாகநதீவ பத்மம் |
பூர்வேவ திங்நூதன மிந்து மாபாத்
தம்பார்வதீ நந்தன மாததாநு ||

இப்படிக் குழந்தையை பரமேச்வரனும் பார்வதியும் தன் தன் மடியில் வைத்து முத்தமிட்டுக் கொஞ்சி மகிழ்ந்தார்கள். தேவ துந்துபிகள் முழங்கின. கந்தர்வர்கள் பாடினார்கள். அப்ஸர மாதர்கள் ஆடினார்கள்.

குமாரஸ்வாமியும் வளர்பிறைத் திங்கள் போல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். அவருடைய பால லீலைகள் வெகு வசீகரமாகவும் ஆச்சர்யமாகவும் இருந்தன. ஒரு வேளை பரமேச்வரனுடைய வாகனமான விருஷபத்தின் கொம்புகளை அசைத்தார். ஒரு வேளை பார்வதி தேவியின் வாகனமான சிங்கத்தின் பிடரியைப் பிடித்து இழுத்தார்; ஒருவேளை பரமேச்வரனுடைய மடியில் உட்கார்ந்து ஈசனுடைய கழுத்திற்கு அணியாக விளங்கும் கருநாகத்தின் பற்களை "ஒன்று, ஒன்பது, இரண்டு, பத்து, ஐந்து, ஏழு" என்று எண் அறியாதவர்போல் எண்ணி விளையாடினார். ஒருவேளை ஈசனுடைய தலையில் இருக்கும் கங்கை நீரில் கையிட்டதும் கை குளிரவே அதைச் சிவனுடைய நெற்றிக் கண்ணின் நெருப்பு ஜ்வாலையில் காய்ச்சினார்; ஒரு வேளை ஈசன் தலையில் விளங்கும் திங்களை முத்தமிட்டார்.

ஒருநாள் தேவேந்திரன் பரமேச்வரனைத் தரிசிக்க வந்தான். அப்போது திங்களைச் சடையிலணிந்தவரும், கங்காதரரும், முக்கண்ணரும், நீலகண்டரும், மரித்த தேவாசுரர்களுடைய மெய்ச் சாம்பல்களால் வெளுத்த நித்யஸ்வரூபரும், பிரம கபாலமேந்தியவரும், சூலத்தைத் தரித்தவரும், மின்னல்கொடி போன்ற பார்வதி தேவியுடன் விளங்குகினறவரும், திரிபுராந்தகரும், விடையேறிப்பவருமான சம்புவைக் கண்டு களித்து மெய்யன்புடன் வணங்கினான். அவருடைய ஒப்பற்ற ஒளியைக் கண்டு அச்சப்பட்டான்.

ததாவிதம் சைலஸுதாதிநுதம்
புலோம புத்ரீ தமிதோ நிரீக்ஷ்ய |
ஆஸீத் க்ஷணம் க்ஷோபபரோநு கஸ்ய
மனோ நஹி க்ஷுப்யதி தாமதாம்னி

பிறகு இந்திரன் பரமேச்வரனை மறுபடியும் வணங்கி, "பிரம தேவன், உங்களுடைய செல்வக் குமரனால் எங்களுக்கு மங்களமுண்டாகுமென்று அபயமளித்தார். குமாரக் கடவுளை எங்களுடைய தேவசேனைத் தலைவராக அளித்துக் காத்தருளல் வேண்டும் என்று பிரார்த்தித்தான். பரமேச்வரனும் குமாரக் கடவுளை நோக்கி, "தேவர்களுக்கு ஜயமங்களம் உண்டாகும்படிச் செய்வாயாக" என்று கட்டளையிட்டார். (தொடரும்)

## சுதந்திரம்.

[நிர்வாக ஆசிரியர்: எச். டி. ராஜா, ஆசிரியர்: கே. அருணாசலம், வாரப் பத்திரிகை, வருஷ சந்தா, உள்நாடு ரூ. 11-0-0, வெளிநாடு ரூ. 12-0-0, தனிப் பிரதி—விலை அணா 3. மயிலாப்பூர், சென்னை-4.]

பத்திரிகை உலகின் பூங்காவில் எண்ணிக்கையற்ற மலர்கள் தினே தினே விருத்திமாகிக் கொண்டு வருகிற இக்காலத்தில் கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே ஆனந்தமளிக்கும் முறையில் "சுதந்திரம்" என்கிற அத்புத புஷ்பம் அபார மணத்துடனும், கம்பீரத் தோற்றத்துடனும் பூத்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுடன் வரவேற்று, பெருமைப்படுகிறோம். மனோரஞ்சித புஷ்பத்தை நுகர்ந்தால் பலவித வாசனைகள் ஒரே சமயத்தில் வீசுவதுபோல், சுதந்திரமும் பல அறிய விஷய வாசனையுடன் மக்களுக்குப் பயன் தரும் முறையில் வெளியிட்டுள்ள அதன் திறமை மிகுந்த ஆசிரியரைப் பாராட்டுகிறோம். பத்திரிகை நீடூழி வாழ்க!

## நல் வாழ்வு.

[ஆசிரியை: சிதாலக்ஷ்மி குமாரஸ்வாமி, மாதப் பத்திரிகை வருஷ சந்தா: உள நாடு: 6-12-0, வெளி நாடு: 7-2-0 தனிப் பிரதி அணா 8. தண்டயார்பேட்டை, சென்னை-21]

உலகத்தில் நல் வாழ்வை வேண்டாத மக்களே இல்லை. நல் வாழ்வை அடைவதற்கான சாதனங்களை முன்னோர்கள் பலவிதங்களிலும் வாழ்க்கையின் நிழல்போல் வகுத்திருக்கின்றார்கள். அவற்றில் ஒரு அப்சமாகிய தேகப்பயிற்சியையும், மற்றும் இதர அம்சங்களையும் ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி அவர்கள் வெகு உத்சாகத்துடன் தனனுடைய கடமையாயும், கணவரின் கட்டளையாயும் பாரத்தைத தாங்கி உலகத்திற்கு நல்வாழ்வை அளிக்க முன் வந்திருப்பதைப் பாராட்டுகிறோம்.

## THE HINDU HIGH SCHOOL MAGAZINE

TRIPLICANE : : MADRAS

April 1956] [Vol. XV. No. 2

This Magazine has entered its 15th year of its useful service and the second number is under review. In addition to the News & Notes of the School, it contains a good number of articles on varied subjects of abiding interest in several Languages — such as English, Tamil, Telugu, Hindi & Sanskrit.

The opportunities presented by the Magazine have kindled the latent faculties of the present & the past pupils of the Institution and the contributors have shown their merit in presenting their ideas splendidly & popularly. Even the general reader can find many interesting topics to read & enjoy. The photoes are a feast to the eyes. We wish the Magazine every success.

# சமையல் கலை

## காட்சி 1.

ரமணி:— அம்மா! அத்தை இன்னும் இரண்டு நாளில் புறப்பட்டு வருவதாகக் கடிதம் எழுதி இருக்கின்ருள்.

தாயார்:— ரமணி! இதென்னடா வம்பு! நளினியை நம்புவதற்கில்லை. அவளால் நமக்கும் தலை குனிவு. வருபவர்களுக்கும் அவமானம் உண்டாகும். பேசாமல் உங்க அத்தை ரகுவுக்கு வேறு பெண்ணை கல்யாணம் செய்து விடலாம்.

ரமணி:— போம்மா நீ ஒன்னு! நம்ப அப்பாவும் நளினியை ரகுவுக்கு தான் கொடுக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருக்கிருர். அத்தையும் அதற்கு மேலே ஆசையாக இருக்கிருள். நடுவில் உனக்கு என்ன ஆட்சேபணை?

தாயார்:— ரகுதான் பயப்படுகின்ருனே நளினியின் குணத்திற்கு. அதுவும் இந்த நளினி என்ன செல்கின்றதோ?

ரமணி:— அதற்காக தான் இந்த யுக்தியை தயாரித்தேன். அத்தை கூட சம்மதித்து விட்டாள். இந்த நளினியை தான் சரிக்கட்டணும்.

(நளினி வருகின்ருள்)

நளினி:— என்ன அண்ணு? இங்கே நளினியின் தலை உருளுகின்றது.

ரமணி:— இந்த கடிதத்தைப் படித்துப் பார். அத்தை எழுதி இருக்கின்ருள்.

(நளினி படிக்கின்ருள்)

நளினி:— [கோபத்துடன்] ஜவுளிக் கடை பொம்மையா? என்ன திமிர் இவர்களுக்கு? பிள்ளைதான் என்னை ஜவுளிக் கடை பொம்மை என்று பரிகாசம் செய்தால் இந்த அத்தை பெருமையோடு....எவ்வளவு தைரியமாக அதை எழுதி இருக்கின்ருள் பாரேன்.

தாயார்:— சீ! கொஞ்சம் மரியாதையாக தான் பேசேன். நாளைக்கே அவர்கள் கிட்டேதானே நீ குப்பைக் கொட்டணும்

நளினி:— ஊஹும்! ஒருக்காலும் அது நடக்காது.

ரமணி:— உஷ்! என்னம்மா நீ! அட்வான்ஸாகவே மரியாதை வைக்கச் சொல்கிறே. [நளினிக்குத் தெரியாமல் அம்மாவுக்கு ஜாடை காட்டுகின்ருன்]

ரமணி:— நளினி! இதோ பார்! உன்னை அவர்கள் மட்டம் தட்டியதற்கு நீ கட்டாயம் பழிக்குப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டும். ரகுவுக்கு நீயே மனைவியாகி அவர்களுடைய திமிரையே அடக்க வேண்டும்.

நளினி :— ரகு என்னை விரும்பவில்லை என்று அத்தை தான் எழுதி இருக்கிறாளே !

ரமணி:—இல்லை ! ரகு உன்னைப் பார்த்து விட்டு அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதாக கூறி இருக்கின்றானும், எப்பெழுதோ சின்ன வயதில் பார்த்தது தானே அவன். அதுவும் நளினி, அவன் ஒரு மாதிரி ! பெண்மை........இலட்சிய மனைவி....பண்பு என்று ஏதாவது உளறிக் கொண்டிருப்பான். காலேஜ்லே படிக்கிற பெண்களே அவனுக்குப் பிடிக்காதாம். அதனாலே........

நளினி:— (இடைமறித்து) அதனாலே நான் என்ன பண்ண முடியும் ?

ரமணி:— கலேஜ்லே டிராமவிலே நடித்து மெடலெல்லாம் வாங்கி இருக்கிறாயே! உன்னுடைய நடிப்புத் திறமையை இதில் காட்டு பார்ப்போம், ரகு ஊரிலிருந்து வந்தவுடன் நீ வெட்கப் படுபவள் மாதிரி அவன் எதிரிலேயே வராமல் இருக்க வேண்டும்.

நளினி:—நான் என் ப்ரெண்ட் வீட்டில் போய் இருந்து விடுகின்றேன்.

ரமணி:—அது தான் கூடாது. அம்மா பின்னாலேயே சமையல் கட்டுடன் நீ இருக்க வேண்டும். அம்மா சமையல் செய்தால் கூட நீ செய்ததாக தான் நான் கூறப் போகின்றேன். என்ன ?

நளினி:— (யோசித்தவாறு) சரி. உன் இஷ்டம் (போகிறாள்)

ரமணி:— அப்பாடி இந்த பரதேவதை ஒரு வழியாக சம்மதித்தது.

காட்சி 2

(அத்தையும், ரகுவும் வருகின்றனர். ரமணி வரவேற்கின்றான்)

ரமணி:— வா அத்தை ! ரகு வாடா ! ஏண்டா பழி! வெட்கப்படறே !

ரகு:—(தனது தாயாரிடம் இரகசியமாக) உன் மருமாள் கையைக் குலுக்கி வரவேற்க ஓடி வந்து விடுவளோ என்று பயமாயிருக்கு எனக்கு !

அத்தை:— ரமணி ! நளினி எங்கே ! ரகு கேட்கிறான் பார்.

ரமணி:— அது ஏன் கேட்கறே ? அவள் உங்க கடிதம் வந்ததிலேயிருந்தே வெட்கத்தினாலே ரொம்ப வெளியே வருவதே இல்லை.

ர. தாயார்:—நளினி! அத்தையை பார்க்கலாம் வாம்மா!

ரமணி:—வேண்டாம், வேண்டாம், அவள் வரமாட்டாள் ரகு ! உன் பேரை மாத்தி வேறு ஏதாவது வைத்துக் கொள்ளடா!

ரகு:—ஏன்?

ரமணி:—ராகு காலம் என்ற வார்த்தையையே அவள் சொல்லுவதில்லை. ஏனென்றால் உன்பேர் அதிலே வருகிறதாம்

(எல்லோரும் சிரிக்கின்றனர்)

காட்சி 3

[நளினி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். ரமணி அங்கு வருகின்றான்]

ரமணி:— அம்மா! ஒரு சந்தோஷச் சமாச்சாரம், இன்னிக்கு ரகுவே என்னிடம் வந்து நளினி என் எதிரில் வருவதே இல்லை, என்று ரொம்ப வருத்தப் பட்டுக் கொண்டான்.

(ரமணியின் அத்தை வருகின்றாள்)

அத்தை:—அதைச் சொல்ல வந்து விட்டாயே! என் கிட்டே நளினியை கல்யாணம் பண்ணிக் கொள்வதாகவே சொல்லி விட்டான். இனிமேல் ஏற்பாடு பண்ண வேண்டியதுதான்.

ரமணி:—ஏய் நளினி! எங்களுக்கு முன்னே சாப்பிட உட்கார்ந்துவிட்டாயே. ரகு பார்த்தால் அதோகதிதான். அவன் இலட்சிய மனைவி இவ்வளவுதானா என்று நினைத்துக் கொள்வான்.

அத்தை:—போடா! குழந்தையை மிரட்டாதே! கல்யாணம் ஆறதுக்கு முன்னாலே என்ன மரியாதை வேண்டிக் கிடக்கிறது.

நளினி:— சரிதான் (முணுமுணுத்தவாறு போகின்றாள்)

காட்சி 4

[ரகுவும், நளினியும் தற்செயலாக வீட்டின் பின்புறத் தோட்டத்தில் சந்திக்கின்றனர்]

ரகு:— நளினி! (நளினி சிரித்தவாறு ஒரு பக்கமாகத் திரும்பிக் கொண்டு நிற்கின்றாள்)

ரகு:— நளினி! ஏன் பேசவே மாட்டேனென்கிறாய்! என்னிடம் கூடவா உனக்கு வெட்கம்?

நளினி:—எங்கேயாவது ஜவுளிக்கடை பொம்மைபேசுமா?

ரகு:— (அசட்டு சிரிப்புடன்) என்னை மன்னிச்சுடு! நளினி! காலேஜ்லே நீ படிப்பதனால் உன்னைப் பற்றி உன்னைப் பார்க்காமலேயே நான் ஏதேதோ நினைச்சுண்டு தவறாக பேசிவிட்டேன் [மெல்ல அவள் கையை பற்றுகின்றான்]

நளினி:— (விஷமப்புன்னகையுடன்) கையை விடுங்கள்! உள்ளே எண்ணெய் காய்கின்றது அடுப்பில். நான் போக வேண்டும்.

ரகு:— [கோபத்துடன்] அடசட்! சதா சமையலைப் பற்றிதானுப் பேச்சு? உன்னைப் பார்த்தால் காலேஜ்லே படிக்கிறவளாகவே இல்லையே! இதோ பார் நளினி! இன்னும் சரியாக ஒரு மாதம் இருக்கு நம்ப கல்யாணத்திற்கு! அதற்குப் பிறகு நீ சமையலறைப் பக்கம் எட்டிப் பார்க்கக் கூடாது நான் ஹோட்டலிலிருந்து சாப்பாடு வரவழைத்துவிடுகின்றேன். ஆமாம்! செல்லிவிட்டேன்.

நளினி:— (குறும்புடன்) அப்படியா! இதை முதலில் உங்க அம்மாவுக்கும் என் அண்ணுவுக்கும் சொல்லுங்கள்.

(நளினி ஓடி விடுகின்றாள்.)

காட்சி 5

[ரகுவுக்கும் நளினிக்கும் மணமாகி ஒரு வாரத்திற்குப் பின் நளினி போட்டோக்களை வரிசையாகப் பார்க்கின்றுள். ரகு அங்கு வருகிறுன்]

ரகு:— இது யாரு நீயா? (போட்டோக்களை வரிசையாகப் பார்கினறுன்)

நளினி:— ஆமாம்!

ரகு:—உனக்கு டான்ஸ் கூட ஆடத் தெரியுமா? அட சைகிலோடே ஒருப் போட்டோ எடுத்துக் கொண்டிருக்கிருயே! உனக்கு சைகில் விடத் தெரியுமா?

நளினி:— ஓ!

ரகு:— இதோ டேபிள் டென்னிஸ், கிரிக்கெட் கோஷ்டியோடு..........என்ன இந்த விளையாட்டெல்லாம் கூடத் தெரியுமா?

நளினி:— உம்! இன்னும் டிராமாவில் நடித்த பொழுது எடுத்துக் கொண்ட போட்டோ வெல்லாம் உள்ளே இருக்கிறது. அதையும் பாருங்கள்.

ரகு:—நளினி! இந்த உலகத்தில் உனக்குத் தெரியாத கலையே கிடையாதுப் போலிருக்கே!

நளினி:—ஒன்றே ஒன்று உண்டு. அது தான்...


ரகு:—என்ன! என்ன அது?

நளினி:—ச....மை....ய....ல்...கலை.

ரகு:—(ஆச்சரியத்துடன்) சமையல் கலை தெரியாதா? இத்தனை நாட்கள் நீ செய்தது எல்லாம...........

நளினி:—[கிண்டலுடன்) அதற்கு மையல்கலை என்றுப் பெயர்.

ரகு:—மையல் கலையா?



நளினி:—[குறும்புடன் நாடக பாணியில்] ஆம்! நாதா தங்களுக்கு அடியாள் மேல் விருப்பு உண்டாக அவ்வாறு நடித்து மையல் மூட்ட வேண்டி இருந்தது. மன்னித்தருள வேண்டும் பிரபுவே!

ரகு:—[கோபத்துடன்] மோசம்!

நளினி:—முழுவதும் கேளுங்க மோசடியே! எங்க அம்மா வினுடைய இரவல் கைத்திறமையுடன், நான் நடிக்க, எங்க அண்ணா ரமணி அவர்கள் டைரக்ட் புரிந்தார்.

ரகு:—எங்க அம்மா கூட ஏமாந்தாளா?

நளினி:—அதுதான் இல்லே! உங்க அம்மா தானே உதவி டைரக்டர், நீங்க ஒருவர் தான் ஏமாந்தவர். அதனாலே பணத்தை பறி கொடுத்த முதலாளி நீங்கதான்!

ரகு:—தப்பு! இந்த அழகு தேவதையை நான் மனைவி யாக அடைந்தவரை நானதான் ஒரு நாளும் ஏமாந்தவன் ஆகமாட்டேன். நான் தான் கதா நாயகன்.

[உண்மையாகவே வெட்கம் கொண்ட நளினி கைகளால் முகத்தை மூடிக் கொள்கின்றாள். ரகு அவள் கைகளை மெல்ல விடுவித்துக் கவனிகின்றான். அது காறும் அங்கு நின்று இருவர் பேச்சையும் ரசித்து கொண்டிருந்த ரமணி அவர்கள் அருகில் வருகின்றான்]

ரமணி:—கட்! கட்! ஓகே! (மூவரும் சிரிக்கின்றனர்)

# ★ ஜோஸ்யம் பலித்தது ★

உலகத்தில் மனிதர்கள் நினைத்ததுபோல் எல்லாம் நடந்து விடுவது இல்லை. ஒன்று நினைக்க கடவுளின் சித்தம் வேருக இருக்கிறது. இப்பொழுது நினைத்தாலும் ஆச்சர்யமாக இருக்கிறது. 20 வருஷங்களுக்கு முன் எனக்கு அப்பொழுது வயது 20. இன்டர் பாஸ்பண்ணி இருந் தேன். தகப்பனர் என்னை மேலே படிக்கவைக்க சக்தியில் லாமல் உத்தியோகத்தில் சேர்த்தார். சிறுவயதிலேயே தந்தையை இழந்த என் தகப்பனர் தன் தம்பிகளை படிக்க வைப்பதிலும் கல்யாணம் பண்ணி வைப்பதிலும் செலவு செய்துவிட்டு எங்களை முன்னுக்கு கொண்டுவர முடி யாமல் தவித்தார். எனக்கு மேலே படிப்பதில் ஆசையும் ஆர்வமும் இருந்தாலும் பலவித அவசர கார்யங்கள் காரண மாக உத்யோகம் செய்ய ஒப்புக் கொண்டேன். நாங்கள் அப்பொழுது ரங்கூனில் இருந்தோம். ஏதோ ஒரு கம்பெனியில் 100 ரூபாய் உத்யோகம் கிடைத்தது. என்னை போன்ற சிறுவர்கள் காலேஜ் வாழ்க்கை நடத்து வதும் நான் ஒருவர் கீழ் கை கட்டி சேவகம் செய்வதும் எனக்கு வெறுப்பை அளித்தன.

இதன் நடுவில் என் கல்யாணத்துக்கு யோசனை செய் துக்கொண்டு இருந்தார்கள் என் பெற்ருேர். இவர்கள் யோசனை செய்வதற்கும் ஒரு நாள் என் தாய் மாமனிட மிருந்து கடிதம் வருவதற்கும் சரியாக இருந்தது. தாயில் லாமல் செல்வமாக வளர்ந்த தன் பெண்ணை வேறு இடத்தில் கொடுக்க மனம் இல்லாமல் எங்கள் குடும்பத்தில் ஒப்புவிக்க வேண்டுமென்றும் என் தாயையும் தகப்பன ரையும் கேட்டு எழுதி இருந்தார். பழம் நழுவி பாலில் விழுந்தது போல் இருந்தது இவர்களுக்கு.

பெண் நன்ருக இருக்கிறது. பாட்டு நன்ருக சொல்லி கொடுத்து இருக்கிருன். பாவம் தாயில்லா பெண் இங்கு வந்தால் சுகப்படும் என்று பேசிக்கொண்டார்கள். அவர் கள்கடிதத்துடன் பெண்ணின் ஜாதகமும் அனுப்பினர்கள் போல் இருக்கிறது. அதைவைத்துக் கொண்டு என் தகப் பனர் ஜோஸ்யர் வீட்டுக்கு அலைந்து கொண்டு இருந்தார்.

என் பிதா இந்த விஷயத்தை என்னிடம் பிரஸ்தா பித்தார். கல்யாணத்துக்கு இப்போது என்ன அவசரம் என்று என்னை படிக்க வைக்காத கோபத்தை மறைத்து பேசினேன். அப்பாவுக்கு ஒரே கோபம், ஏன் மறுக்கிருய். நாமோ சுற்றத்தாரை எல்லாம் விட்டு இத்தனை தூரம்

ரங்கூன் வந்து சேர்ந்து விட்டோம். வெளியவர்கள் யாரும் பெண் கொடுக்க மாட்டார்கள், முழுமனதுடன் அவர் தன் மகளை கொடுக்கத்தயாராய் இருக்கிறார். பெண் அழகாகவும் நன்றாக பாட்டு பாடக்கூடியவளாகவும் இருக்கிறாள். வேண்டுமானால் போடோவை வரவழைக்கிறேன். உனக்கு என்ன குறை என்றார். எனக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. அப்பா என்னை படிக்க வைக்க உங்களுக்கு பணம் இல்லை. என்னையும் என் மனைவி மக்களையும் காப்பாற்ற சக்தி இருக்கிறதா? யாரோ செய்துவிட்ட கடனை தீர்க்க நாம் தலை குடுத்திருக்கிறோம். இன்னும் உங்களுக்கு பாரமா நான் இருக்க விரும்பவில்லை. கல்யாணத்தைப்பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. ஒருவேளை வேலை போய்விட்டால் அவள் என்னமோ நன்றாக பாடுவாள் என்று சொன்னீர்கள். நான் பை எடுத்து கொண்டும் அவள் பாடிக்கொண்டும் தான் தெருவில் புறப்பட வேண்டும். இதற்கு சம்மதமானால் நீங்கள் தாராளமாக ஏற்பாடு செய்யலாம். எனக்கே குடுக்க வேண்டுமென்று அவ்வளவு அக்கரை இருந்தால் இன்னும் 2 வருஷங்கள் காத்து இருக்கட்டும். நிலையான வேலை ஆனபிறகு பண்ணிக் கொள்கிறேன். அதற்குள் ஒரு பர்மாகாரியை அழைத்து வந்து இது என் மனைவி என்று காட்டமாட்டேன். அதுவரை என்னை நம்பலாம் என்று சொல்லிவிட்டு போய்விட்டேன். என் தகப்பனர் ஏன் அவ்வளவு வற்புறுத்தினர் என்று எனக்கு அப்பொழுது தெரியாது. பிறகுதான் விஷயம் இத்தனை வருஷங்கள் கழித்து தெரிய வந்தது.

என் தகப்பனர் மிக இளகிய மனசு உடையவர். யார் கஷ்டப்பட்டாலும் பார்த்து சகிக்க மாட்டார். கடைசி காலணு தன் ஜோபியில் இருந்தாலும் யாராவது கேட்டால் எடுத்து கொடுத்துவிடுவார்.

ஒரு ஜோஸ்யர் என் ஜாதகம் பார்த்தவுடன் இது நல்ல யோக ஜாதகம். நல்ல உத்யோகமும் ப்ரக்யாதியும் அடைவான். இந்த பையன் என்று சொல்லி — அந்த பெண்ணின் ஜாதகம் பார்த்து இந்த பையனுக்கு இவளை கல்யாணம் பண்ண முடியாது. ஏனென்றால் இவள் இரண்டாவது கால்யாணத்தவனுக்குதான் வாழ்க்கை படுவாள். தன் வாழ்நாள் முழுவதும் பலவித கஷ்டங்களை அனுபவிப்பாள் என்று சொல்லிவிட்டாராம்.

அன்று முழுவதும் என் தகப்பனருக்கு ஒரே கவலை. பாவம் பிற இடத்துக்கு போய் கஷ்டப்படுவாளே நம் பிள்ளைக்கே பண்ணிக் கொண்டால் அவன் யோகம் இவள் கஷ்டத்தை மாற்றிவிடக்கூடும் என்று எதிர்பார்த்தார். எனக்கு ஜாதகத்தில் நம்பிக்கை கிடையாது அதனல் இதை

பற்றி சொல்லவும் அவருக்கு தைர்யம் இல்லை. ஏதோ கவலையுடன் இரண்டு நாள் அலைந்து கொண்டு இருந்தார் என்று மட்டும் எனக்குத் தெரியுமே தவிர எதற்காக கவலைப்படுகிறார் என்று தெரியாது.

ஒருநாள் ஆபீஸுக்கு போனவுடன் சுபசமாச்சாரம் எனக்காக காத்து இருந்தது. கம்பெனியின் நஷ்டத்தின் காரணமாக பலபேர்களை வேலையிலிருந்து எடுத்து விட்டதாகவும் அதில் நானும் ஒருவன் என்று தெரிந்து கொண்டேன்.

அவ்வளவுதான் எனக்கு இருந்த கொஞ்ச நஞ்ச ஆசைகூட கல்யாண விஷயத்தில் இல்லாமல் போய்விட்டது. வீட்டுக்கு வந்து விஷயம் தெரிந்ததும் எல்லோருக்கும் ஒரே விசனம். கல்யாணம் நின்று போயிற்றே என்று என் தங்கை பாவம் அடிக்கடி வருத்தப்படுவாள்.


இரண்டு நாள் கழித்து என் சொந்தக்காரிடமிருந்து அவசர தந்தி வந்தது. என் மாமன் ஆபத்தில் இருப்பதாகவும் உடனே புறப்பட்டு வரவேண்டும் என்று என் தகப்பனருக்கு எழுதி இருந்தார்கள். மறுநாள் எந்த கப்பலுக்கும் புறப்பட சித்தமாயிருந்தார். ஊருக்கு புறப்படும் முன் கடைசியாக என்னைப் பார்த்து என்னப்பா இன்னும் உன் தீர்மானம் மாறவில்லையா? என்று கேட்டார். இல்லையப்பா அவளை நல்ல இடமாக பார்த்து குடுத்து விடுங்கள். இங்கே வந்தால் கஷ்டப்படுவாள் என்றேன். இங்கே வந்தால்தான் கஷ்டப்படமாட்டாள் என்று ஏதோ மறைமுகமாக சொல்லிவிட்டு போய்விட்டார். அப்பொழுதும் அவர் மனதில் இருந்தது எனக்குத் தெரியாது. என் தகப்பனர் ஊருக்குபோன 5 நாள் கழித்து எங்களுக்கு கடிதம் வந்தது. நல்ல படித்தவனும் நிறைய சொத்து உடையவனும் ஆனல் இரண்டாவது கல்யாணத்தவனுமான ஒருவரனை நிச்சயித்து இருப்பதாக 2 நாளில் கல்யாணம் நடக்கும் என்று எழுதி இருந்தார். நாங்கள் எல்லாம் கொஞ்சம் திருப்தி அடைந்தோம். பெண்ணின் கல்யாணத்தையாவது பார்த்து அவர் உடம்பு தேரட்டும் என்று ப்ராத்தித்தோம். ஆனல் இரண்டு நாள் கழித்து நாங்கள் கேள்விபட்டது எங்களை யெல்லாம் ரொம்ப வருத்தத்தில் அழுத்தியது. கல்யாணம் ஆன அன்று இரவே மாமா போய்விட்டார் என்ற செய்தி வந்தது. நாங்களெல்லாம் கலங்கினேம். வருந்தி என்னப் பிரயோஜனம் அவள் விதி அப்படி இருந்தது. இதெல்லாம் நடந்து என் தகப்பனர் ஊரிலிருந்து வந்த பிறகு ஒரு நாள் ஏதோ ஜாதக விஷயம் வந்தபொழுது அந்த ஜோஸ்யர் சொன்

னது நிஜமாயிற்று. 'உன் பிள்ளைக்கு இவள் ஆகமாட்டாள். இரண்டாவது கல்யாணத்துக்குத்தான் குடுக்க முடியும்; வாழ்க்கை முழுவதும் கஷ்டப்படும் ஜாதகம்' என்று சொன்னார். அது நிஜமாய் போய்விட்டது. ஆனால் கஷ்டப்படுவாள் என்று எனக்கு தோன்ற வில்லை. மாமியார் மாமனார் இருக்கிறார்கள். நல்ல படித்த பிள்ளை ஏராளமான சொத்து இருக்கிறது. அதனால் அவளைப்பற்றி கவலைப்பட வேண்டாம் என்று எங்களுக்குள் சமாதானம் பண்ணி கொண்டோம்.

20 வருஷங்கள் கடந்தன. ஜோஸ்ய'த்தில் நல்லதெல்லாம் பலிக்காவிட்டாலும் கெட்டதெல்லாம் பலிக்குமோ என்னவோ? அந்த பெண்ணின் கணவனுக்கு வேலை போய், சொத்தெல்லாம் அழிந்து இப்பொழுது கவனிப்பார் அற்று தவிக்கிறாள்.

என் தாய் தகப்பனார் செய்த தர்மத்தால் ஜோஸ்யர் சொன்னபடி நல்ல சம்பளமும் குழந்தை குட்டிகளுடன் நான் சந்தோஷமாய் இருக்கிறேன்.

---



**மனைவி:**—என்ன அப்படி பேப்பரிலே முழுகிப் போயிருக்கங்கோ. எந்த பையனாவது வரதக்ஷிணை இல்லாமெ கல்யாணம் பண்ணிண்டிருக்கான்னு வந்திருக்கா?

**கணவன்:**—அட! அசடே, பையன்கள் வரதக[illegible] வாங்கறது பழசா[illegible] போன விஷயம்டீ. ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ண சில[illegible] 10,000 ரூபாய் வரத(ர)க்ஷிணையும், 10,000 ரூபாய்க்கு வைர[illegible] பிள்ளை வீட்டாரைக் கேக்கறாளாம்; அந்த காலத்தன்னு எதிர்பார்த்தேன்!



1—5—56
183282

# கிருஹலக்ஷ்மி

(கன்னட நாவல் சுருக்கம்)

மூல எழுத்தாளர்: ஸ்ரீமான் அ. நா. கிருஷ்ணராவ்.

மொழிபெயர்ப்பாளர்: ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

மார்கழி மாதம் கலியாணம் என்று நிச்சயமாயிற்று. (கன்னடக்காரர்கள் மார்கசிர என்னும் மார்கழியிலும் கலியாணம் செய்வார்கள்) ரங்கம்மாள் விவாகத்திற்கு வேண்டிய அப்பளம், வடகம், முறுக்கு மாவு, ஊறுகாய் முதலியவைகளை தயாரிப்பதில் முனைந்தாள். ஆச்சாரியார் புட்டசோமனஹள்ளியிலேயே தங்கியவராய் கலியாணக் காரியங்களை கவனித்தார். லக்ஷ்மணராவ் வாரத்துக்கு ஒரு தடவை வந்து, வெளி விவகாரங்களை மேற்பார்வை பார்த்துவிட்டு போவார்.

ரங்கம்மாவின் வீட்டு பொக்கிஷமெல்லாம் காலியாகி விட்டிருந்தது. அதிகப்படி நகைநட்டுகளெல்லாம் மாயமாகி விட்டிருந்தன. கடன் உடன்களை அடைப்பதற்காக விலை பெற்ற நிலபுலன்களும் விற்றுப் போயிருந்தன. கலியாண சிலவுக்கு என்ன செய்வதென்ற கவலை ரங்கம்மாளை அறிக்கத் தொடங்கிற்று. ஆச்சாரியருக்காவது, லக்ஷ்மணராவுக்காவது இதைப் பற்றிய தகவல் தெரிவிக்காமல் காரியத்தை நடத்தலானாள்.

இரவில் ரங்கம்மாளுக்கு தூக்கமேது? படுக்கையில் அமர்ந்து கண்ணீர் உதிர்ப்பாள். வயது வந்த பிள்ளைகள் இருவர் இருந்துங்கூட என் பங்குக்கு யாருமில்லையே' என்று வருத்த முருவாள்.

விவாக முகூர்த்தம் சமீபிக்க சமீபிக்க ரங்கம்மாளின் மனோவியாகூலமும் அதிகரித்தது.

ஒரு நாள் சாயந்திரம் ரங்கம்மாள் வியாதியஸ்தர்களுக்கு வாசல் திண்ணையில் அமர்ந்து மருந்து கொடுத்து கொண்டிருந்தாள். கரீம் வந்து தலைவில் நின்றான்.

"எங்கே வந்தாய் கரீம்? வீட்டில் எல்லோரும் சௌக்கியம் தானே?"

"நல்லா இருக்காங்கம்மா"

"உன் நாட்டுப் பெண்ணுக்கு பிரஸவமாயிற்றா?"

"இன்னும் இல்லீங்க"

என்ன வந்தாய்? யாருக்காவது மருந்து வேண்டுமா?"

"இல்லீங்க — உங்ககிட்டே பேசணும்னு வந்தேனுங்க."

"உட்கார்"

வியாதியஸ்தர்களின் ஜோலி முடியும் வேளைக்கு மணி ஆறு அடித்து விட்டது. எல்லோரும் சென்ற பிறகு கரீமை நோக்கி,

"என்ன சேதி சொல்" என்றாள் ரங்கம்மாள்.

"சின்னம்மாளின் கலியாணம் நிச்சய மாச்சுங் களாமே?"

"நிச்சயமா யிருக்குடாப்பா — மார்கழி மாதம் முகூர்த் தம்."

"பிள்ளை யாரம்மா?

"சிக்கராயனபுரத்து ஹெட்குமாஸ்தா ஜயராவின் பிள்ளை மாதவ ராவ்."

"சிலவுக்கு என்ன செய்வீங்கம்மா? கலியாணத்துக்கு பெரிய ஐயா ஏதாவது எடுத்து வச்சுருக்காங்களா?"

ரங்கம்மாளின் வாயில் வார்த்தை கிளம்பவில்லை. கண்களில் கண்ணீர் சுரந்தது.

"ஏன்மா அழறீங்க. மவராஜா, பெரிய ஐயா, நீங் களும் ஊரையே வளத்திங்க, ஆயிரம் பெயருக்கு சோறு போட்டீங்க. உங்க தர்மம் உங்களை காப்பாத்தும்."

"எனக்கும் அதான் தைரியம் கரீம்."

"எனக்கு ஒரு விசயம் நெனவுக்கு வந்தது அம்மா. சொல்லலாம்னு வந்தேன்."

"சொல்லுடாப்பா"

"பெரிய ஐய்யா கேட்டவங்களுக் கெல்லாம் கடன் கொடுப்பாரு. அதில் ஏதாவது வாபஸ் வந்ததா"

"இது வரைக்கும் தம்படிகூட வாபஸ் வரவில்லை"

"பெங்களூரில் சாமராவ்னு ஒரு வக்கீல் இருக்காங்க."

"தெரியும் — நம் ஐய்யா அவரைப் பற்றி சொல் வார்."

"சாமராவுக்கு பெரிய ஐயா பணம் கொடுத்திருக் காருனு தோணுது. அவரை ஒரு பேச்சு கேட்டீங்கன்னா நல்லது."

"எப்படி கேட்பது கரீம்?"

"அதுனலென்னங்க அம்மா — நான் கேட்கிறேன். என் கூட யாரையாச்சு அனுப்புங்க"

ரங்கம்மாள் யோசித்துவிட்டு 'ஆகட்டும்' என்று ஒத் துக் கொண்டாள்.

அந்த சனிக்கிழமை லக்ஷ்மண ராவ் வந்த பொழுது, அவருக்கு விஷயத்தைத் தெரிவித்துவிட்டு, கரீமுடன்கூட லக்ஷ்மண ராவையும் பெங்களூருக்கு அனுப்பினள்.

கரீமின் ஆலோசனை பயனளிக்குமென்ற நம்பிக்கை ரங்கம்மாளுக்குக் கின்சிதுமில்லை. கரீமின் சுவாமி பக்தி

அவளை மகிழ்வித்ததே, அன்றி அவளுடைய 'பணமில்லா குறை' தீரவில்லை.

மறுநாள் மாலை பஸ்ஸில் பெங்களூருக்கு சென்றவர்கள் திரும்பி வந்தார்கள். அவர்களுடைய மலர்ந்த முகங்களைக் கண்டு ரங்கம்மாளுக்கு சந்தோஷ முண்டாயிற்று. "போன காரியம் என்னவாயிற்றுப்பா?"

"பழும்மா"

"பழமா!"

லக்ஷ்மணராவ் "ஆமாம். நாங்கள் நேற்று பஸ்ஸிலிருந்து இறங்கினதுமே நேராக சாமராவின் கச்சேரிக்கு போனோம், இங்கேக் கலியாணம் நிச்சயமாகி இருக்கும் செய்தியை அவருக்கு தெரிவித்துவிட்டு" பெரிய ஐயா யாருக்காவது பணம் கொடுத்திருக்கும் விஷயம். உமக்கு தெரியுமா? என்று கேட்டான். சாமராவ் தம் மேஜை ட்ராயரைத் திறந்துத் தேடி ஒரு பழைய டைரியை எடுத்துப் புரட்டிப் பார்த்துவிட்டு" மூன்று வருஷத்துக்கு முந்தி நான் என் பெண்ணின் கலியாணத்துக்காக மூவ்வாயிரம் ரூபாய் கடன் வாங்கிக் கொண்டிருந்தேன். கலியாணம் நடந்த ஐந்தாறு மாதங்களில் என் கைக்கு பணம் கிடைத்தது. ராயருக்குக் கொடுக்கப் போனேன்." இப்பொழுது எனக்கு பணம் அவசியமில்லை. உங்களிடமே இருக்கட்டும். அவசியமான பொழுது கேட்கிறேன். கொடுங்கள்" என்றார். நான் அதை பாங்கியில் **Fixed deposit** டில் வைத்திருக்கிறேன். வட்டி இருநூற்று எண்பது ஆகி இருக்கும். வாங்கிக் கொடுக்கிறேன். கொண்டு போங்கள்" என்றார்.

"வேறென்ன சொன்னார்?

"பணம் போதாமல் போனால் எனக்கு தெரிவியுங்கள். நான் கொடுக்கிறேன். ராயர் எனக்கு செய்திருக்கும் உதவிக்கு நான் என்ன கைமாற்று செய்தாலும் போதாது. அம்மா அவர்கள் மனதினுள் எவ்வித குறையும் வைத்துக் கொள்ளாமல் கலியாணத்தை நடத்தட்டும். அவருக்கு இவ்விடத்திலிருந்து எந்தவித ஒத்தாசை வேண்டி இருந்தாலும், தெரிவித்தால் சிரமேற் கொண்டு செய்கிறேன்" என்றார்.

"எப்பெயர்பட்ட தர்மாத்மா! இன்னும் இப்பெயர்பட்டவர்கள் இருக்கிறார்களே. உன் உதவியை எப்படி தீர்ப்பேண்டாப்பா."

"நீங்க அப்படி சொல்லாதீங்க தாயே. நான் உங்க மவன்."

"ஆமாண்டாப்பா சந்தேகமே இல்லை! ரங்கம்மாவுக்கு போன உயிர் வந்த மாதிரி ஆயிற்று. எதிர்பாராமல் கிடைத்த இந்த சகாயத்தை பகவானே அருளினான்


என்று உறுதியாக நம்பினாள். ரங்கம்மாவின் இந்தச் செய்தியை கேட்டு ஆச்சாரியர் ஆச்சரியப்பட்டார்.

"எந்த தைரியத்தில் கலியாணத்தை நிச்சயம் செய்து, ஏற்பாடுகள் செய்துக் கொண்டிருந்தயள் அம்மா?"

"எனக்கு இருந்தது, பகவான் மீது பாரம் போடுவது ஒரே வழிதான், ஆச்சாரியரே."

"இது அலௌகிக தெய்வ பக்தி"........ உண்மை.... உண்மை. பகவானை நம்பினால் மனப்பூர்வமாக நம்பிவிட வேண்டும். நான்—என்னுடையது என்ற அகங்காரத்தை பக்தனானவன் கைவிடும் வரைக்கும் பகவானின் அருள் கிடைக்காது."

ரங்கம்மாளின் உள்ளம் பூரித்தது. அருகில் உட்கார்ந்திருந்த ருக்மிணியை அணைத்துக் கொண்டு கண்ணீர் உதிர்த்தாள் ருக்மிணிக்கும் துயரம் ஏற்பட்டது.



"நீசும்மா அழாதேம்மா" என்றாள்.

"அழவில்லை ருக்கூ—ஆனந்த பாஷ்பம். ரொம்பப் புண்ணியசாலியடியம்மா."

"என் ஜோஸ்யம் பொய்யாகாது தாயே" என்று ஆச்சாரியார் பகர்ந்தார்.

ஃ ஃ ஃ

ருக்மிணி அதிருஷ்டசாலி என்பதற்கு ரங்கம்மாளுக்கு விரைவிலேயே மற்றொரு அத்தாக்ஷி கிடைத்தது.

ஒரு நாள் பகல் பன்னிரெண்டு மணி சமயம். ஆச்சாரியர் ஸ்வாமி பூஜை செய்துக் கொண்டிருந்தார். ரங்கம்

மாள் சமையல் செய்து முடிக்கும் சமயம். வாசல் பக்கம் யாரோ அழைத்த மாதிரியாயிற்று.

"யார்?" என்றபடி ரங்கம்மாள் வெளியே வந்தாள்.

"நான்தான்மா. அமல்தாரின் சேவகன்"

"என்னப்பா, வந்தாய்?"

"யஜமான் உங்களை பார்க்க வருகிறாராம். தெரிவித்து விட்டு வா என்றார்."

"எதற்கு என்னை பார்க்க?"

"என்னவோ தெரியாதம்மா."

அமல்தாரரும் வந்தார். வாசல் பக்கமே அமர்ந்து, கால் ஜோடுகளைக் கழட்டி வைத்துவிட்டு உள்ளே நுழைந்தார். ருக்மிணி ஒரு பாயை விரித்தாள். அமல்தார் அமர்ந்தார்.

"வெங்கட்ராவின் குடும்பம் தாங்கள்தானே தாயே" என்று கேட்டார்.

"ஆமாம்பா! ஏன் ?"

"உங்கள் கணவர்தானே ஆனைக்கெரை கன்ட்ராக்ட் செய்து கொண்டிருந்தார்.

"ஆமாம்."

"அவர் வைகுண்டவாசியான பிறகு உங்கள் மூத்த மகன் அனந்தராவ்கன்ட்ராக்ட்செய்துக்கொண்டிருந்தார்."

"ஆமாம், எல்லா வைபவமும் முடிந்துவிட்டது."

"காரியம் பாங்காக நடக்கவில்லையென்று அரசாங்கம் அவரிடமிருந்துநாலாயிரம்ரூபாய் வசூல்செய்ததுஅல்லவா?"

ரங்கம்மா பயந்து போனாள். "இது என்ன புதிய கண்டமோ" என்று;

"அந்த வியவகாரம் தான் முடிந்துவிட்டதே,"

"இல்லையம்மா, முடியவில்லை."

"நாங்கள் இன்னும் ஏதாவது கொடுக்கவேண்டுமா ?"

"இல்லை தாயே, உங்களிடமிருந்து நாலாயிரம் வாங்கிக் கொண்டது நியாயமில்லையென்று கண்டுபிடிக்கப்பட்டு உமக்கு அந்த நாலாயிரத்தையும் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் நிச்சயம் செய்திருக்கு."

"இதென்ன பிரமையா— உண்மையா?" என்று ரங்கம்மாள் திகைத்தாள்.

"உண்மையாகவா!" என்று கேட்டாள்.

"உண்மைதான் அம்மா—இங்கே வாருங்கள்—இதற்கு சம்பந்தப்பட்ட கடிதங்கள், நீங்கள் ரசீதுக்குக் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தால் நான்பணம் அனுப்புகிறேன்."

ரங்கம்மாள் ரசீதுக்குக்கையெழுத்திட்டுக்கொடுத்தாள்.

"வீட்டில் கலியாணம் நிச்சயம் செய்திருக்கியளாம்."

"ஆமாம். உமக்கு எப்படித் தெரிந்தது?"

"எங்கள் ஹெட் குமாஸ்தா ஜயராவ் உமக்கு சம்பந்தியாகப் போகிறவராம்!"

"ஆமாம்."

"ரொம்ப சந்தோஷம். உங்கள் கைக்கு பணம் சீக்கிரம் கிடைக்கும்படி செய்கிறேன். உங்கள் புகழை நான் நிறைய கேட்டிருக்கிறேன்."

"இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் போகலாமே!"

"இல்லை, தாயே— நான் இப்பொ சிக்கராயணபுரம் போய் சேர்ந்தாகவேண்டும். கலியாணத்துக்குதான் வருகிறேனே."

"வெய்யலில் வந்திருக்கயள்—கொஞ்சம் பானகமாவது செய்து கொடுக்கிறேன்" என்று உள்ளே போய் ராமுவை பேட்டைக்கு (கடை வீதிக்கு) அனுப்பி இளநீர் வரவழைத்தாள். கால்மணிப் பொழுதில் அமல்தாரருக்கு பானகம் இளநீர், வாழைப்பழம், தேங்காய் வெல்லம் போட்ட அவல் (வெல்ல அவல்) பொரிவிளங்காய் உருண்டை எல்லாம் வந்தது. அமல்தார் பலகாரம் சாப்பிட்டப் பிறகு "மிருஷ்டான்ன போஜனம் சாப்பிட்ட மாதிரியாயிற்று. ஆயிரம் பெயருக்கு அன்னமிட்ட கை" என்று கைகூப்பி, பயணமானர்.

ரங்கம்மாள், உடனே சுவாமி அறைக்குச் சென்று சாஷ்டாங்கமாகப் பணிந்து "சுவாமீ—உன்னை நம்பினவர்களை நீ கைவிட்டதில்லை" என்று துதித்தாள்.

---



கணவன்:—நம்ப ரெண்டு பேரும் அப்ளிக்கேஷன் போட்டதற்கு உனக்கு வேலை அகப்பட்டு விட்டது. ஊம்...நாளையிலிருந்து உனக்கு ஆபீஸ் உத்யோகம். எனக்கு அடுப்பங்கரைஉத்யோகம்தான் சாமான்கல்லாம் எங்கே வைத்திருக்கு என்று கொஞ்சம் தயவுசெய்து சொல்லிடும்மா...

[மஹாத்மாஜி சேவா சங்கத்தின் புத்தாண்டு விழாவில் வழக்கப்படி நடத்துகின்ற சிறுகதை, கட்டுரை, அறிவுப்போட்டி முதலியன நடந்தன. அதில் முதல் பரிசுப் பெற்ற சிறு கதையை பிரசுரித்திருக்கிறோம்.

இச்சமயம் நேயர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான விஷயத்தைத் தெரிவிக்கிறோம். போட்டியில் கலந்துகொள்பவர்களுக்கு (மாதக் கணக்கோ, நாள் கணக்கோ தவணை கொடுக்காமல்) வந்த இடத்தில் சிறுகதைக்கு "தாய் முக்யமா? தாரம் முக்யமா?" என்ற **தலைப்பைக்** கொடுத்து **குறிப்பிட்ட** நேரத்திற்குள் பரீக்ஷையில் எழுதுவதுபோல் அங்கேயே எழுதிகொடுக்கும் படி இந்தப் போட்டி நடந்தது; இது மிகவும் பெருமைபடக் கூடிய விஷயம்.]

குமாரி M. P. சுகந்தா

முதற் பரிசுக் கதை

# 'கண் திறக்கப்பட்டது'

காலை மணி சுமார் 6 இருக்கும். 'வாணிவிலாஸ் ஆஸ்பத்திரி மேல் மாடியின் ஓர் அறையில் படுத்துக் கொண்டிருந்த ராகவனின் கண்கள் காலைக் கதிரவனின் உதயத்தின் அழகை பருகிக்கொண்டிருந்தன. காலையில் ஆதவனின் உதயம் கண்கொள்ளா காட்சியைக் கண்டவுடன் தன் கவலைகளை மறந்து குதூகலிக்க ஆரம்பித்து விடுகிறது." என்னே பகவானின் அற்புத சிருஷ்டி என்று வியக்காமல் இருக்க முடியவில்லை. நோயாளியான ராகவனின் மனமும் இதையே சிந்தித்துகொண்டிருந்தது. அதே சமயம் வெளியில் டக் டக் என்று டாக்டருடைய பூட்ஸின் ஒலி கேட்டது. சப்தம் இதோ வெகு சமீபத்தில் வந்து விட்டது. ஆ !! அதோ புன்னகை பூத்த முகத்துடன் டாக்டர் சுரேஷ் வந்துகொண்டிருந்தார். ராகவனின் முகம் மலர்ந்தது. 'வாருங்கள் டாக்டர் 'குட்மார்னிங் !என்று வரவேற்றான். " ஹலோ மிஸ்டர் ராகவன். குட்மார்னிங். இன்று உனக்கு ஒரு சந்தோஷ சமாச்சாரம் சொல்லப் போகிறேன். அதற்கு பதில் எனக்கு 'என்ன தரப்போகிறாய் ! என்றார். ராகவன்' ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"என்ன ராகவன்." புரியவில்லை! இதோ புரிய வைக்கிறேன் கேளு, இன்னும் 5 அல்லது 6 நாட்களில் உனக்கு இந்த ஆஸ்பத்திரி என்கிற சிறைச் சாலையிலிருந்து விடுதலை. இப்போது மகிழ்ச்சி தானே' என்று சிரித்தார். இதைக் கேட்ட ராகவன் முதலில் திகைப்படைந்தாலும், மறு விநாடி ஒரு புறம் தான் பூரண குணமாகிவிட்ட ஆனந்தமும், மறு புறம் தன் நிலையை நினைத்து வருத்தமும் அடைந்தான். அதே சமயம் பாக்க பாக்க ப்ளாஸ்கில் காப்பியுடன் ராகவனின்

தாயார் மங்களம் உள்ளே வந்தாள். அவளைப் பார்த்ததும் டாக்டர் புன்னகையுடன், "அம்மா! உங்கள் சலியா உழைப்பி ஞலும், ஆசியினுலும், அன்பினுலும் உங்கள் மகன் பூரண குணமடைந்து விட்டான். நீங்கள் இன்னும் 5 நாட்களில் இங்கிருந்து போய்விடலாம் என்ருர்." இதைக் கேட்டவுடன் மங்களம்மாளின் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன. தன்னை மறந்தாள், தன் நிலையை மறந்தாள். ஓடிச் சென்று டாக்டரின் கால்களில் விழுந்து, "டாக்டர்! என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போறேன், டாக்டர்! இந்த சந்தோஷமான வார்த்தைகளை கூறிய உங்களுத்கு என்ன உதவி செய்யப் பொகிறேன்! என் மகனுக்கு உயிர்ப் பிச்சையளித்த கலியுகக்கடவுளே! உங்க ளுக்கு என் தோலை செருப்பாய் தைத்தாலும் போதாது. பக வான் உங்களுக்கு ஒரு குறைவும் வைக்காமல் நீங்கள் மகிழ்ச்சிக் கடலில் எப்போதும் திளைக்க உங்களுக்கு அருள்புரிய வேண்டுகிறேன்" என்ருள். டாக்டரின் கண்களில் கண் ணீர் ஆருய்ப் பெருகிக் கொண்டிருந்தது. "எழுந்திருங்கள் அம்மா! தாங்கள் என் தாயாருக்குச் சமானமானவர்கள் —என் காலில் விழுந்தது என்ன அபசாரம்! அம்மா! நான் என்ன செய்தேன். உங்களுடைய கரை காணுத அன்பு வெள்ளத்தினல், இடைவிடாப்பிரார்த்தனைக்கிணங்கி பகவான் உங்களுக்கு இம்மாதிரி அருள் புரிந்திருக்கிருர். அம்மா! நான் தங்களை என் சொந்த தாயாராகவே எண்ணுகிறேன். தாயின் அன்பை இந்த ஜென்மத்தில் பெறக் கொடுத்து வைக்காத பாவியம்மா நான். என் துரதிருஷ்டம், நான் பிறந்த 2 வது மாதம் என் தாயாரை அடித்துவிட்டது. அதற்குப் பிறகு எப்படியோ கஷ்டப் பட்டு இன்று இந்நிலைக்கு வந்திருக் கிறேன். ஆனல் நீங்கள் இங்கு வந்தது முதல் நீங்கள் உங்களுடைய மகனுக்குச் செய்யும் சிசுருஷையையும், உங்களு டைய பிள்ளைப் பாசத்தையும் கண்டவுடன்தான் என்னு டைய உள்ளம் தாயன்புக்காக ஏங்குகிறது. என் மனப் பூர்வமாக நான் உங்களை என் தாயாராக பாவிக்கிறேன். என்னை மறந்துவிடாதீர்கள். உங்கள் விலாசம் கொடுங்கள். நான் அடிக்கடி உங்களை பார்க்கவா விரும்புகிறேன் என்ருர்.

இதைக் கேட்ட ராகவனும், அவன் தாயாரும் மிகவும் ஆனந்தமடைந்தார்கள். "டாக்டர்! உங்களை எப்படி மறக்க முடியும். கட்டாயம் நாம் அடிக்கடி சந்திப்போம்" என்றவுடன் டாக்டர் போகக்கிளம்பினுர். கிளம்பினவர் சடக்கென்று ராக வன் தோள்களைப்பற்றி, அன்போடு "கடைசியாக ஒரு வார்த்தை சொல்கிறேன். ராகவன்! நீங்கள் மிகவும் பாக்யசாலி. இப்படி ஒரு கிடைப்பதற்கரிய பொக்கிஷமான தாய் கிடைத்திருக்கிரு

எப்பா உனக்கு. அவளுடைய அன்பின் சக்தியினால் தான் நீ பூரண குணமடைந்தாய் என்பது உனக்கே தெரிந்திருக்கும். இப்படிபட்ட அன்பான தாயை நான் இதற்கு முன் கண்டதேயில்லைம்பா. ராகவன்! உலகத்தில் எந்தப் பொருள் வேண்டுமானாலும் பணத்தாலோ, அல்லது வேறு வழியாலோ சம்பாதிக்கலாம். ஆனால் இந்த தாய் என்கிற ஒரு விலையிலா மாணிக்கத்தைப் பெறவே முடியாது, ராகவன்! உனக்குத் தெரியாததை நான் சொல்லப் போவதில்லை. இருந்தாலும் என் ஆசைக்குச் சொல்கிறேன். எக்காரணத்தைக் கொண்டும் என்ன கஷ்டம் வந்தாலும் இந்தப் பெற்ற அன்னையை ஒருபோதும் அலட்சியம் செய்யாதே, அப்பா. அவள் நம்மை எப்படியெல்லம் வளர்க்கப் பாடுபடுகிறாள். பத்து மாதம் பொறுமையுடன் சுமக்கிறாள், பிறந்ததும் தாலாட்டி பாலூட்டுகிறாள், அடிக்கிறாள், உடனே அணைக்கிறாள். இப்படியாக தன் உடல், பொருள், ஆவியை தியாகம் செய்கின்றாள். அவன் பள்ளிக்கு போவதைக் கண்டு ஒரு ஆனந்தம், அவன் கல்லூரியை மிதித்தவுடன் ஒரு மகிழ்ச்சி. அவன் பட்டமடைந்ததைக் கண்டு களிப்பு. அவன் ஆபீஸிக்கு செல்வதைக் காண சந்தோஷம். அவனுடைய திருமணம் கண்டு குதூகலம். அவன் மனைவி, குழந்தைகளைக் கண்டு ஒரு பூரிப்பு...இப்படியாக தன் வாழ்க்கையை அந்த மகனுடைய நிழலிலேயே அர்ப்பணித்துவிடுகிறாள். அப்படிபட்ட அன்னையை ஒரு போதும் மறவாதே என்று ஒரு குட்டிப்ரசங்கமே செய்து விட்டு ஒரு புன்னகையுடன் வெளியேறினார்.”

ராகவனின் தாய் ப்ரமித்து நின்றாள். ராகவனின் காதுகளில் டாக்டரின் ஒவ்வொரு வார்த்தையும் எதிரொலித்தன. அவன் தன் தாயை நிமிர்ந்து நோக்கவே கூசினான். ஆஹா, டாக்டர் கூறியது எவ்வளவு உண்மை! அவர் கூறிய ஒரு வார்த்தையையாவது என் தாயாரிடம் நான் செய்து காண்பித்திருக்கிறேனா? இந்த அன்னையை எவ்வளவு பாடு படுத்தியிருக்றேன். ஆனால் “பெத்தமனம் பித்து பிள்ளை மனம் கல்லு” என்கிற பழமொழிப்படி என்னுடைய துர்ச்செயல்களை நினையாமல் இன்று என்னை ஆளாக்கியிருக்கிறாளே! இந்த அன்னைக்கு செய்த துரோகம் எழு ஜென்மமெடுத்தாலும் போகுமா? போகாது, போகவே போகாது! ஆ! இந்த துரதிருஷ்ட பிண்டத்தைப் பெற்ற அன்னையே! என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை செல்லுங்கள். இந்தப் பாவியை உங்கள் வாயால் மன்னித்தருளுங்கள்! என்று கூறி தன் தாயாரின் காலில் தடாலென்று விழுந்தான்.”

மங்களம்மாளுக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. பிறகு தன்னுணர்வு பெற்றவளாய் ராகவனை எடுத்து அன்புடன்

அணைத்து "அப்பனே நீ என்ன தவறு செய்தாலும் என் சொல்வமடா நீ!. உன்னை நான் என்னப்பா 'மன்னிப்பது? எழுந்திரு. காப்பி சாப்பிடு நேரமாகி விட்டது" என்று கூறி, காப்பி டம்ளரை எடுத்து அவனிடம் கொடுத்தாள். ராகவன் காபியை பருகிக் கொண்டிருந்தானே தவிர அவன் மனம் என்னவோ கடந்த கால நிகழ்ச்சிகளை எண்ணலாயின.

ராகவனின் தகப்பனாருக்கு அவன் ஒரே பிள்ளை. அவன் பிறந்த மறு வருஷமே அவர் பரலோகம் அடைந்து விட்டார். பிறகு அவன் தாயார் தான் நாலு வீடுகளுக்குச் சென்று வேலை செய்து பிழைத்து ராகவனை, படிக்கவைத்தாள். ராகவனும் மிக புத்திசாலியாகப் படித்து பி. ஏ. முதல்வகுப்பில் தேறினான். இனியும் தான் அவளைக் கஷ்டப்படுத்தலாகாது என்று எண்ணி வெகுமும்மரமாக வேலை தேடவாரம்பித்தான்.

கடைசியில் ஒரு கம்பெனியில் வேலை கிடைத்தது. அந்தக் கம்பெனி முதலாளிக்கு எடுத்த எடுப்பிலேயே ராகவனைப் பிடித்துவிட்டதால் அவன் தாயாரின் சம்மதத்துடன் தன்ஒரே மகள் ரமாவை ராகவனுக்கு மணம்செய்வித்தார். மணமான புதிதில் ராகவனின் வாழ்க்கை மிகவும் இன்பமாகத்தான் இருந்தது. பிறகு தான் அவன் மனைவி ரமா தன் சொரூபத்தைக்காட்டத் தொடங்கினாள். புதிதாக என்ன சொல்ல இருக்கிறது! உவக வழக்கம்போல் ராகவன் தன் மனைவியுடைய போதனையினால் தன் தாயை மனமாற வெறுக்கத் தொடங்கி விட்டான்.

ஒருநாள் ஏதோ கோபத்தில் தன் தாயைப் பார்த்து, "ஏ, தரித்திரப் பிணமே! உனக்கு என் சீக்கிரம் ஒழிவதற்கு வேளை வரவில்லை" என்று கத்திவிட்டான்! அவ்வளவுதான்! பொறுத்துப் பொறுத்துப் பார்த்திருந்த பூமாதேவியைப்போல் பொறுமையுடன் இருந்த மங்களம்மாள் அன்றிரவே சொல்லாமல் கிளம்பிவிட்டாள். அவளை தேட ராகவனோ,ரமாவோ முயற்சி செய்யவில்லை. சனி தொலைந்தது என்று இருந்தார்கள். ஆனால் கடவுள் சும்மா இருப்பாரா? கூடிய சீக்கிரமே ராகவன் தன் தாயாருக்குச் செய்த துரோகத்தை உணரும் ஸ்திதியை அடைந்தான். நன்றாக இருந்த அவனுக்கு திடீரென்று க்ஷயம்ஆரம்பமாகிவிட்டது. நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் வேளா வேளைக்குமருந்து தவறாமல்சாப்பிடவேணுமென்றும் அவனைப் பரீக்ஷித்த டாக்டர் சொல்லிவிட்டார். அவ்வளவுதான்....அந்த நிமிஷத்திலிருந்து அவனை அந்த வீட்டு வேலைக்காரனுக்கும் கீழாக நடத்த ஆரம்பித்தார்கள். மனைவியும் அலட்சியம் செய்துவிட்டாள்.

கடைசியில் ஒருநாள் மனது தாளாமல் சமுத்திரத்தில் விழ இருந்தவனை மீன் பிடித்துக் கொண்டிருந்த செம்படவர்கள் காப்பற்றிக் கரையில் கொண்டு போட்டார்கள். அதே சமயம் காரிலிருந்து பீச்சுக்கு வந்து இறங்கினாள் மங்களம். அங்கு கும்பலாக இருக்கவே என்னவோ என்று பார்க்கப் போனவள், "என் செல்வமே, ராகவா! நீயா இப்படி அலங்கோலமாக, கிடக்கிறாய்?" என்று அலறிக் கொண்டே காரில் போட்டு தன் வீட்டுக்குக்கொண்டு போனாள். பிறகு கேட்க வேண்டுமா! பெரிய டாக்டரிடம் காண்பித்து ஆஸ்பத்திரியில் ஸ்பெஷலாகக் கவனிக்க ஏற்பாடு செய்தாள். தன் நினைவு வந்ததும் எதிரில் தன் தாய் இருப்பதையும் அதுவும் முன் போல் இல்லாமல் பணக்காரியாக காணப்படுவதையும் உணர்ந்தான். அம்மா என்று கூப்பிட நாக்கு ஓடவில்லை. அவளாகவே சொன்னாள்:—

"அப்பா, ராகவா! எனக்கு எப்படி இவ்வளவு பணம் வந்தது என்று யோசிக்கிறாயா? இந்த அதிசயத்தைக் கேள். உன மாமா ஒருவர் சின்ன வயதாக இருக்கும்போதே வீட்டை விட்டுப் போய்விட்டார். பிறகு அவர் இருக்கும் இடமே தெரியவில்லை. ஆனால் போன மாதம்தான் அவன் இந்த ஊருக்கே வந்துவிட்டாராம். நம்மை எங்கேயெல்லாமோ தேடினாராம். கடைசியில் என்னைக் கண்டு பிடித்து தன்னிடமே வைத்துக்கொண்டார். ஆனால் 10 நாட்களுக்கு முன் அவர் சொத்தை எல்லரம் என் பேருக்கு எழுதி வைத்துவிட்டு கண்ணை மூடிவிட்டார். அவருக்குக் குழந்தை குட்டி யாரும் இல்லை. நான் பக்கத்தில் இருந்தால் என்னவோ உன்னைப் பார்க்கவேணுமென்ற ஆவல் அடிக்கடி எழும்; ஆனால் நான் வந்தால் உனக்கு இடையூறு ஆகுமென்று எண்ணிப் பேசாமல் இருந்தேன். இன்று இந்நிலையில் உன்னைப் பார்க்க என் உள்ளம் துடிதுடிக்கிறது" என்றாள். ஆனால் அப்போது ராகவனின் மனம் அன்னையின் பால்அன்பு செலுத்த இடம் கொடுக்கவில்லை. தன் தாயை பழைய வெறுப்பு உணர்ச்சியுடனே பார்க்கலானான். ஆனால் டாக்டர் சுரேஷின் வார்த்தைகள் அவன் அகக்கண்களை, திறந்தன. தன் தவறை உணர்ந்தான். தாயிடம் மன்னிப்புக் கோரினான். "ராகவா" என்ற அன்னையின் குரலைக் கேட்டு தன்னுணர்வு பெற்றான் "ராகவா! காப்பி டம்ளரைக் கூடக் கொடுக்காமல் அப்படி என்னப்பா பலமான யோசனை!" என்றாள். ராகவன் சிரித்து, "ஒன்றுமில்லையம்மா பஜகோவிந்தத்தில் ஒரு சுலோகம் வருகிறது; அதில்:—

நீ பிணமாகி விட்டால் உன் மனைவி கூட உன் பிணத்தை நெருங்க அசிங்கப் படுவாள் என்ற அர்த்தத்தில் ஒரு இடம் வருகிறது; அதை நினைத்துச்சிரித்தேன்"....என்றான். அதே சம

யம் வாசலில் ஏதோ சத்தம் கேட்டது. மறு நிமிஷம் ராகவன் மனைவி ரமா தான் ஓடிவந்து கொண்டிருந்தாள்.

மறுவினாடி ராகவனின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, "அன்பரே! என்னை மன்னியுங்கள். நான் தெரியாமல் உங்களை அலட்சியப் படுத்தி விட்டேன். நேற்றுதான் பதி பக்தி என்கிற நாடகம் பார்க்கப் போயிருந்தேன். அந்த நாடகத்தில் தன் பதிக்காக தன்னையே தியாகம் செய்கிறாள் மனைவி. அதைப் பார்த்ததும் என் மனம் மாறி விட்டது...மாமி! என்னை மன்னித்து என்னை ஏற்றுக் கொள்ளும்படி உங்கள் மகனிடம் சொல்லுங்கள்" என்று கதறினாள். ராகவன் மெதுவாக அவளை எழுப்பி, "ரமா! கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதில் என்ன லாபம்! இப்போது நான பழைய ராகவனாகக் குணமாகிவிட்டேன். நீ வந்துவிட்டாய்: அன்று நோயாளியாகக் கிடந்தபோது அவ்வளவு வெறுத்தாயே? ஆனால் அதே நிலைமையில் என் தாய் என்னை வெறுக்காமல் காப்பாற்றினாள். மனைவி தன் கணவன் பணக்காரனாகவும், பலவானாகவும் இருந்தால்தான மகிழ்ச்சி அடைகிறாள். நோயாளி ஆகிவிட்டால் அடுத்த நிமிஷமே வெறுக்கத் தொடங்கி விடுகிறாள், உன்னைப் போல ராட்சஸ இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் தாய் அவளுக்கு தன் செல்வன் எந்த நிலையிலிருந்தாலும் ஒரே விதமான அன்பைத்தான் செலுத்துகிறாள். தன்மகனே இப்ரபஞ்சம் என்று நினைத்து ஆனந்தப் படுகிறாள். டாக்டர் சுரேஷ் கூறினார்; 'உலகத்தில் எந்த அதிசயப் பொருளையும் எப்படியாவது அடைந்துவிடலாம்; ஆனால் தாய் என்கிற ஒரு பொக்கிஷத்தை அடைய யாராலும் முடியாது.' ஆகையால், ரமா! நாம் இருவரும் இப்பொழுது என் தாயை வணங்குவோம்," என்று சொல்லி முடித்வுடன்....இருவரும் மங்களம்மாளை வணங்கினர். மங்களம்மாவின் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழிந்தது.

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள்; தாய் முக்கியமா, தாரம் முக்கியமா என்று "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை".

---


## வை. மு. ஸ்ரீ. நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. உதய சூரியன் | 1—4 | 7. தியாகபலி | 0–12 |
| 5. பெண்மணிக் கனல் | 1—0 | 8. ஜெயந்தி சிந்தனைகள் | 1—8 |
| 6. இருளில் ஒளி | 1—4 | 9. ஸ்ரீகோதாஹ்ருதயம் | 0–12 |
| 6A. ஸ்ரீ ஸ்துதி | 0—4 | | |

குமாரி வை. மு. விஜயலக்ஷ்மி.

# என்னருமைத் தந்தை

அன்று எனக்கு என் தந்தை கதை சொன்னபோது அவரும் வெகு உத்ஸாகத்துடன் சொன்னார்; நானும் வெகு ஸ்வாரஸ்யத்துடன்தான் கேட்டேன். அடுத்த பிப்ரவரி 5. ந் தேதி எங்கள் குடும்பத்தில் இத்தகைய பூகம்பம் ஏற்படுமென்று நாங்களென்ன!—பகவானே நினைத்திருப்பானோ மாட்டானோ? அடுத்த க்ஷணம் வருவதை அறியாது கோட்டைக் கட்டுவது தானே மனித இயல்பு. அதற்கு நான்மட்டும் விலக்காவேனா?

அப்பா சொல்லிய கதை என் மனதில் வேரூன்றியதோடு கண்முன்பு படச் சுருள்போல் சுழன்று கொண்டே இருந்தது. அதனால், அப்பாவிடம் என் சிறுபிள்ளைத்தனத்தை விடாமல் "அப்பா! இப்போதெல்லாம் ஜகன்மோகினியில் நீ படமே போடுவதில்லை. முன்பெல்லாம் பாட்டியின் கதைக்கு நிறைய படங்கள் வருவது போல் இந்தக் கதைக்கும் படங்கள் போடவேண்டும்" என்று சிலசில கட்டங்களைக் குறிப்பிட்டு அவரிடம் கேட்டேன்! அவர் குதூகலத்துடன் "அதற்கென்னம்மா ஜமாய்த்து விடலாம்" என்றார். உடல் நலம் சரியாக இல்லாத போதும் கூட கதையைப்பற்றி இவர் எப்படி கற்பனை செய்கிறார்? என்று நான் வியப்பேன். அதற்குப் பிறகு அப்பாவிடம் பேசும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம கதையைப்பற்றியே பேசுவேன். ஆனால் நாள் ஏறஏற அவருக்கு பலஹீனம் அதிகரித்து உத்ஸாகம் குறைந்து சில சமயம் மௌனம் கூட ஸாதிக்க ஆரம்பித்தார். 'உடம்பு சரியில்லாதபோது என் அவனிடம் தொண தொணவென்று பேசுகிறாய்' என்று என் பாட்டி கடிந்துகொண்டதால் பிறகு இதைப்பற்றி அதிகமாய் பேசுவதை நிறுத்திக்கொண்டேன்.

இப்பொழுது நினைத்துப் பார்த்தால் இந்த கதையின் பொறுப்பை நம் தலையில் போடுவதற்காகத்தான் பகவான் எனக்கு அப்படி அப்பாவைத் தொணதொணப்பும்படியான ஒரு புத்தியைக் கொடுத்தாரோ எனத் தோன்றுகிறது. பிப்ரவரி மாதம் இதழ் வெளியான உடனேயே அதை எங்கப் பாட்டி அப்பாவிடம் காட்டி "பத்திரிகை வெளியாகி இருக்கிறது பார்த்தாயா? இதில் பெரும் பாகம் உன் பெண்ணே வேலை செய்திருக்கிறாள்." என்று கூறினாள்.

அனறுதான் ஒரு இன்ஜெக்ஷன் செய்திருந்ததால் அதன் வலி அதிகமாக இருந்தது. அதோடு கையை அமுக்கிப் பிடித்துக் கொண்டே, "பாட்டியினுடைய பேத்தியல்லவா! 'பாட்டியைப்போல் இருப்பாள்' என்று ஒரு ஜோஸ்யர் சொல்லியதை நிரூபிக்க ஆரம்பித்து விட்டாள்.....எங்கே விஜை!" என்று கேட்டார்.

நானும் சற்று சமீபத்திலேயே இருந்ததால் "இதோ இருக்கேன்பா" என்று அருகில் சென்றேன். அப்பா என்

கைகளைப் பிடித்துக் கொண்டு, "கங்கால்ராஜீலேஷன்" (இந்த பதம் எங்கள் சங்கத்தில் அருணோதயம் என்று என் பாட்டி எழுதிய நாடகத்தைப்போட்டபோது அதில் ஒரு கல்யாணத்தரகன் 'கங்கராசுலேஷன்ஸ்' என்றுபேசத்தெரியாமல் இப்படி பேசியதாக ஹாஸ்யமாக நடிக்கப்பட்டது] அதையே என்னிடம் சொல்லிக்காட்டி சிரித்தார். அதுதான் நான் அவரிடம் பேசிய கடைசிபேச்சாகி விட்டது என்பதை நினைக்க துக்கம் தொண்டையை அடைக்கிறது.

பண்டிதர்களும், பாமரர்களும் ஒருங்கே கொண்டாடும் முறையில் பிரகாசித்த என் பிதா பிறந்த பொழுதிலிருந்தே அத்தகைய சிறந்த ஞான முத்திரையுடன் விளங்கிய ஒரு அதிசயம் பிப்ரவரி 5.ந் தேதி எல்லோரும் அலறும்போது வெளியாயிற்று.

அதாவது, 1917ம் வருஷம்செப்டம்பர் மாதம். 2-ந் தேதி இரவு பிறந்தாரம். குழந்தையை நன்ருக நீராட்டி சுத்தம் செய்த பின் பார்க்கும்போது முகத்தில் நன்ருக "திருமண்' இட்டிருக்கும் அடையாளம் சிகப்பாக முத்திரை போட்டது போல் அப்படியே பதிந்திருந்ததாம். அக்காலத்தில் பிரசித்தி பெற்ற 'மிஸ். பென்னட்' என்ற லேடி டாக்டர் இந்தக்குறியைப் பார்த்த உடனே ஆச்சரியப்பட்டு, இதென்ன இப்படி இருக்கிறது' என்று கேட்டாளாம்.

அப்போது கூட இருந்த என் பாட்டியின் பாட்டியும், சித்தியும், அடங்காத வியப்புடன் பார்த்து இது எங்களுடைய ஜாதிச்சின்னம். இது வரையில் நாங்கள் நாமத்தோடு பிறந்த குழந்தைகளைப் பார்த்ததே இல்லையே என்று வியப்போடு குதித்தார்களாம், அப்பொழுது என் பாட்டிக்கு நன்ருகத் தெளிவு ஏற்பட வில்லையாம். மறுதினம் காலையில்தான் குழந்தையையே நன்ருகப் பார்த்தாளாம்.

உடனே "சித்தி! பக்கத்து வீட்டு மாமி சொல்லியபடி தெய்வாம்சம் பொருந்திய குழந்தையாக இருக்கிறதே, கனவு கூட இப்படி நினைவாகிவிடுமா?" என்று என் பாட்டி கேட்டதற்கு "அது என்னவிஷயம்மா?" என்று சித்தி கேட்டாளாம்.

அதற்கு என் பாட்டி சொல்லியதாவது:—"9 மாதத்திற்கு முன்னால் பால் வாங்குவதற்கு அதிகாலையில் வாசலுக்கு வந்தேன். பக்கத்து வீட்டு மாமியும் வாசலுக்கு வந்தார். அவர் என்னைப்பார்த்தவுடன் 'கோதே! நீ இத்தகைய திருட்டுக் காரியம் செய்யலாமா?' என்று அதட்டினாற்போல் கேட்டார். நான் திடுக்கிட்டு போய் "என்ன மாமி!" என்றேன்.

அதற்கு அந்த மாமி, "மாமியாவது சாமியாவது' நேற்றிரவு கோவிலிலிருந்து நம்மாழ்வார் விக்ரகத்தை இடுப்பில் தூக்கிக் கொண்டு வந்துவிட்டாயே" என்றாளாம்.

"என்னமாமி! ஒன்னும் புரியவில்லையே" என்றேன். அந்த மாமி சிரித்துக் கொண்டே, "பயப்படாதேம்மா. நேற்றிரவு நம்மாழ்வார் சாத்து முறையோல்லியோ நீயும் நானும் கோவிலுக்குப் போய் பெருமாள் சேவிப்பது போலவும், நம்மாழ்வார் விக்ரகத்தை நீ இடுப்பில் வைத்துக் கொண்டு வீட்டுக்குப்போய்விட்டது போலவும்கனவுகண்டேன். அதனுடைய பலன் உனக்கு நம்மாழ்வாரைப்போல் ஞானக் கொழுந்தாக ஒரு பிள்ளை பிறக்கப் போகிறது பார்" என்று கேலிசெய்தார். வெட்கத்தால் இந்த விஷயத்தை நான் யாரிடமும் சொல்லவில்லை. பாவம் அந்த மாமியும் போன மாதம் இறந்து விட்டார். அவர் இருந்து இந்த திருமண் முத்திரையைப் பார்த்தால் எவ்வளவு சந்தோஷப் படுவார்" என்றுளாம்.

அதைப்போலவே எத்தனையோ மேதாவியாக வாழ்ந்த என் பிதா, நம்மாழ்வரைப் போலவே சொல்ப வயதிருந்து நம்மாழ்வாரின் மாதத் திரு நட்சத்திரத்தின் அன்றே அவர் திருவடியில் போய் சேர்ந்து விட்டார். எங்கள் வீட்டு பெரியோர்எல்லோருக்கும் இந்த விஷயம் தெரிந்திருந்ததினுல் அனைவரும் இதைச் சொல்லியே கதறினர். பெரியோரின் கனவுக்கு பலிதமிருக்கிறது என்ற உண்மையை இதிலிருந்து தெரிந்துகொண்டேன். (தொடரும்)

---

"வ்நச்சிகம்"

## தலையெழுத்து மாறுமா?

"அப்ப! அப்ப! என்ன வெய்யில். வீட்டிற்குள்ளேயே மண்டை வெடிச்சுடும் போல இருக்கு. வெளியிலே நடக்கும் போது எப்படி இருக்கும்?"... என்று சொல்லியவாறு 'பெரிய மூச்சு ஒன்று விட்டுக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தார் சர்மா.

"எப்படி இருக்குமோ; எருக்கஞ் செடியோ? தினம் உத்யோகம் பண்ணப் போறவாளாட்டும் வெளியே போறதிலே குறைவில்லை. இன்னிக்காவது காயா, பழமா? விஷயத்தைச் சொல்லுங்கோ" என்று சர்மாவின் தர்ம பத்தினியாகிய சங்கரி அம்மாள் வெய்யிலின் உஷ்ணத்தைவிட உக்ரமாகக் கேட்டாள்.

"காயா? பழமா? முகரக்கட்டையைப் பாரு. நீ பிள்ளைய பெத்திருக்க அழகுக்கு பழம் கொலை கொலையாத் தொங்கும். என்னடா இது வெய்யிலிலே வந்திருக்கானேன்னு ஒரு டம்ளர் சில்லுன்னு தண்ணியாவது கொண்டு கொடுப்போமே என்று இல்லாமல் பேச வந்துட்டா பேச்சு."

"என்ன சொன்னேள்? பிள்ளை பெத்த அழகுக்கா......" என்று சர்மாவை அடிக்காத தோஷம் பல்லை கடித்தாள்.

[தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்]




## அத்தியாயம் 1.

### 'மேகப்படலத்தில் மின்னற்கொடி'

**உதயசூரியன் (என் தந்தையின் முதல் நாவலின் பெயரையே** முதல் வார்த்தையாக வைத்து எழுதுகிறேன்.) கீழ்வானத்தில் ஜகஜ்ஜோதியாய் கிளம்பி விட்டான். அந்த நற்செய்தியை ஊர்முழுதும் பறை சாற்றுவதுபோல் பக்ஷி இனங்கள் கூட்டங் கூட்டமாக இன்னிசைப் பாடிப் பறக்கின்றன. மந்தை மந்தையாக பசுவும் கன்றும் 'அம்பா' என்ற கோஷத்துடன் செல்லும் காட்சி காண்போரின் மனத்தைக் களிக்கச் செய்கிறது. காலை வேளைத் தென்றல் காற்று மெல்லெனத் தவழ்ந்து வீசுகிறது. மரம், செடி கொடிகள் 'ஹோ' என்று இரைந்து கொண்டு ஆடுகின்றன. சின்னஞ் சிறுவர்கள் மலை வாயிலிலிருந்து கதிரவன் கிளம்பும் அழகைக் கண்டு பூரித்தபடி கட்டவிழ்த்து விடப்பெற்ற காளைகளைப் போல் ஓடி ஆடி மகிழ்கிறார்கள். தொழிலாளர்கள் தம் தம் தொழிலின் சின்னங்களுடன் சந்தோஷமாகச் செல்கின்றார்கள். இன்னும் சிலர் ஏதேனும் தொழில் அகப்படுமா? என்று மூலை மூலையாக நின்று எதிர்பார்க்கிறார்கள். கோயிலில் காலைப் பூஜையின் மணி யோசையும், மேளத்தின் இசையும் பக்தர்களின் உள்ளத்தில் பக்திக் கனலை எழுப்புகின்றது. எங்கு பார்த்தாலும் ஒரே குதூகலமும் ஆனந்தமும் தாண்டவமாடுகின்றன.


உலகமே ஆனந்த ஸாகரத்தில் மூழ்கிக் கிடக்கையில் ஆனந்த பவனத்திலும்' ஆனந்தம் பொங்குகிறது. அதற்குக் காரணம் அந்த வீட்டின் தற்போதைய அதிகாரியாகிய 'ரஞ்சனுக்கு' ஏற்பட்ட எதிர்பாராத அதிருஷ்டமே ஆகும்.

ரஞ்சன் இளமை முதலே வெகு புத்தி நுட்பமும், திறமையும் கொண்ட கெட்டிக்காரன். ஒவ்வொரு வகுப்பிலும் தங்கப் பதக்கங்களும் பரிசுகளும் யாருக்கென்றால், அது ரஞ்சனுக்குத்தான் என்று அவனது காலசக்கரம் சுழன்று கொண்டிருந்தது. இந்தியாவிலுள்ள உயர்ந்த படிப்புகளெல்லாம் படித்து ஒவ்வொன்றிலும் பரிசும், பதக்கமும், அன்பும், ஆசீர்வாதமும் பெற்று, புகழ்க்கோட்டையைக் கட்டிய சிறந்த வாலிபன். அவன் உலகமே போற்றும்படி இருந்தும், இரு துரதிர்ஷ்ட நிழல்கள் பின் தொடர்ந்து வந்து அவனது சந்தோஷத்தை இருளாக்கின. உலகத்தில் மனிதராய்ப் பிறந்தவர்களுக்கு சுகமும், துக்கமும் மாறிமாறித்தானே வரும்! அதற்கு ரஞ்சன் மட்டும் விதிக்கு விலக்காகிவிட முடியுமா?



ரஞ்சனையும் அவன் தங்கை ரேவதியையும் இரட்டைக் குழந்தைகளாகப் பெற்ற அவன் தாயார், தாயில்லாக் குழந்தைகள் என்ற கவசத்தை அணிவித்து விட்டு, மறைந்து விட்டாள். பால் மணம் மாறாத பச்சைக் குழந்தைகளைக் கண்டு ரஞ்சனின் தகப்பனார் 'ஷண்முகம்' துக்கத்தினால் மிகவும் தத்தளித்துப்போய் மூளையே கலங்கிவிடும் நிலைமைக்கு வந்து விட்டார். தன் இரு கண்மணிகளைப் போன்ற இச் சின்னஞ்சிறு குழந்தைகளுக்காகத் தான் மறுவிவாகம் செய்து கொள்ளாமல் தியாக தீக்ஷை பெறுவதா? அல்லது தனக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பிற்காக மறுமணம் செய்து கொள்வதா? என்று முடிவு செய்ய முடியாமல் தவிக்கும் சமயம் குழந்தைகளுக்கும் தனக்கும் ஏற்பட்ட தேக அசுகம் காரணமாகவும், சுற்றத்தாரின் வற்புறுத்தலும், சூழ்நிலையின் ஆதிக்கமும் ஒன்று கூடி உலகத்தவர்களைப்போல அவரும் மறுமணம் செய்து கொள்ளும்படி நேர்ந்துவிட்டது.

மாற்றாந்தாயாக வந்த 'லக்ஷ்மி' அப்பெயருக்குத் தகுந்தபடிதான் நடந்து கொண்டாள். இருப்பினும் அவள் என்ன சொன்னாலும் அதை ரஞ்சன் காதில் வாங்கிக் கொள்ளாமல் தன் காரியம் உண்டு, தான் உண்டென்று போய்க் கொண்டிருப்பான். ஆனால், ரேவதியோ எந்தப் பக்கம் தராசு நிறை சாய்கிறதோ அதுபோல, ஒரு சமயம் சித்தியுடன் சேர்ந்து கொண்டு ரஞ்சனுடன் சண்டைக்கு வருவாள். ஒரு சமயம் ரஞ்சனுடன் சேர்ந்து கொள்வாள். அவள் தன் சுயபுத்தியின்படி நடக்காமல் எல்லோருடைய வார்த்தைகளையும் நம்பி, நல்லதா? கெட்டதா? என்று யோசிக்காமல், 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்ற முறையில் துணிச்சலாக யார் சொல்லையும் கேளாமல் மிதமிஞ்சிய நவநாகரீக முறையில் தன் வாழ்நாளைக் கடத்துவதைக் கண்டு, ரஞ்சன் கோபமும் வெறுப்பும் கொண்டு



நயத்திலும், பயத்திலும்கண்டிப்பான். அந்தச்சொல்லையும் லக்ஷ்யம் செய்யாமல் தன் மனம்போன போக்கில் கண்டவர்களுடன் பேசுவதும், கண்ட இடங்களுக்குப் போவதுமான அதீத முறையில் போவதை இளைய தாயார் லக்ஷ்மி கண்டிக்காமல் ரஞ்சன் திட்டும் போதும் எட்டிப் பார்த்துக் கொண்டே இன்னும் வளர்த்திக் கொண்டே போனாள்.

உலக விசித்திரத்தைப் பாருங்கள்! ஒரு தாய் வயிற்றில் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்திருந்தும் அண்ணனின் புகழத்தக்க குணத்திற்கும், தங்கையின் இகழத்தக்க குணத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்! — மலைக்கும் மடுவுக்குமாகவல்லவா இருக்கிறது!

ரஞ்சன் கல்லூரியில் படிக்கும்போதே அவனுக்கு விஞ்ஞான சாஸ்திரத்தில் உள்ள திறமையைக் கண்டு, அக் கல்லூரியிலுள்ள பேராசிரியர்களும், கல்லூரி அதிகாரி களும் இவனை மேல் நாடுகளுக்கு அனுப்பி சிறந்த விஞ் ஞான நிபுணனாகச் செய்யவேண்டும் என்று ஒரு கண் வைத்திருந்தார்கள். அதற்குத் தகுந்தாற்போல் ரஞ்சன் எல்லாப் படிப்புகளிலும் முதலில் தேறியிருப்பதால் அர சாங்கத்தாரே தம் செலவில் அவனை அமெரிக்காவிற்கு அனுப்பத் தீர்மானித்தார்கள். அவனுக்கும் அவன் தந் தைக்கும் ஏற்பட்ட சந்தோஷத்திற்கு எல்லையும் வகுக்க முடியுமா? கரை காணாத கடலுக்கு ஒப்பாகவே பொங்கி யது. ஸ்திரபுத்தியற்ற ரேவதிக்கு இதைப்பற்றிப்பெருமை யும் இல்லை, சிறுமையும் இல்லை. ஆனால்,தன்னைக் கண்டிப் பதும் சிடுசிடுப்பதும் இல்லாமல் 4 வருடம் அமெரிக்கா விற்குப் போய்விடுவதைத் தனக்கு நிம்மதியாகவே நினைத் தாள். மாற்றாந் தாயாகிய லக்ஷ்மியோ தன்னுடைய மகன் ரகுவுக்கும் இத்தகைய ஒரு அதிர்ஷ்ட காலம் வருமா? நான் எத்தனையோ அக்கரையாகச் சொல்லிக் கொடுத்தும், ப்ரை வேட் வைத்துக் கவனித்தும் 'சிரிப்பார் முன் இடறி விழு வது'போல ஒவ்வொரு வருஷமும் மேல்வகுப்புக்குப் போகா மல் இரண்டு வருஷம், மூன்று வருஷம் முட்டி போடுவதைப் பார்த்தால் வயிறு பற்றி எரிகிறது. தாயற்ற அனாதையா கிய இந்த ரஞ்சனுக்கு மட்டும் இத்தகைய அதிர்ஷ்டம் எப் படி வந்துவிட்டதோ தெரியவில்லையே. சாதாரணமாக இருக்கும்போதே அவனை உலகம் எவ்வளவோ கொண் டாடுகிறது. அமெரிக்காவுக்கும் போய்வந்துவிட்டால் கேட் கவே வேண்டாம். அவனை அமெரிக்காவுக்குப் போகாமல் தடுத்துவிட்டால் என்ன?... ஆம்.... அதற்கு ஏதாவது வழி செய்யவேண்டும் என்று வஞ்சனையாக நினைப்பாள்.

சுற்றத்தினரும் சிநேகிதர்களும் ரஞ்சன் மேல்நாடு சென்று பெரிய விஞ்ஞான நிபுணனாக வெற்றி மாலையுடன் திரும்பியதும் அவனை நம் மருமகப்பிள்ளையாக்கிக் கொள்ள லாம் என்று மனக்கோட்டைக் கட்டிப் பூரித்தார்கள்.

ரஞ்சனின் பிதாவை, தன் மகன் உயர்ந்த பதவியில் இருக்கப் போகிறான் என்ற சந்தோஷமும், தன் மனைவி இருந்து இதைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்ற ஏக்கமும், கண் திருஷ்டி ஒன்றும் படாமல் நல்லபடி யாகத் திரும்பி வரவேண்டுமே.... என்ற பயமும் ஒன்று கூடிக் கலக்கின.

ரஞ்சன் பிறந்தது முதல் இந்த வீட்டிலேயே வேலைக் காரனாக இருக்கும் முத்துவுக்கு விவரிக்க முடியாத சந்தோ

ஷமும், தனக்கே ஒரு பெரிய புதையல் கிடைத்துவிட்டது போன்ற மகிழ்ச்சியும் கூடிக் குதிக்கச் செய்தன.

ரஞ்சனின் தாயார் இறந்ததிலிருந்து முத்துதான் ரஞ்சனையும், ரேவதியையும் தாய் ஸ்தானத்தில் இருந்து மிகவும் பிரியமாக வளர்த்தான். மாற்றாந்தாய் கெட்டவளாக இருப்பதால் அவள் குழந்தைகளை என்ன செய்து விடுவாளோ என்று குழந்தைகளை அவளிடம் நெருங்க விடாமல் தானே குழந்தைகள் எழுந்தது முதல் தூங்கும் வரையில் கவனித்துக் கொள்வான். குழந்தைகளைக் கவனிக்க ஷண்முகத்துக்கு நேரமே இருக்காது. தன் வேலையைச் செய்யவே அவருக்கு நேரம் போதவில்லையே........அவரும் பரிபூர்ணமாக முத்துவை நம்பி, குழந்தைகளை ஒப்படைத்து விட்டார். முத்து இவ்வளவு நாணயஸ்தனாகவும் ரஞ்சனையும் ரேவதியையும் தன் குழந்தைகளாகவே பாவித்து அன்பை அள்ளிக் கொடுத்து பாசத்தோடு வளர்ப்பதையும் பார்த்த ஷண்முகத்துக்கு முத்துவிடம் ஒரு அலாதியான ப்ரீதியும் மதிப்பும் உண்டு. அவர் முத்துவை ஒரு வேலைக்காரனாக எண்ணாமல் தன் கூடப் பிறந்த சகோதரனாகவே பாவித்துத் தனக்குள்ள சகல உரிமைகளையும் அவனுக்கும் கொடுத்திருந்தார். இது அந்த ஊருக்கும், அவரது உறவினர் களுக்கும்....ஏன்? முதலில் அவரது இளைய மனைவிக்கும், ரேவதிக்குமே பிடிக்கவில்லை. சிநேகிதர்களும், உறவினர்களும் ஷண்முகத்தினிடம் இதைப்பற்றி எத்தனையோ கூறிப் பார்த்தார்கள். முத்துவின் எதிரிலேகூட இரைவார்கள். முத்துவிடமே, “நீ இந்த மாதிரி எஜமான் என்ற மரியாதை இல்லாமல் சமமாகப் பழகுவது கொஞ்சங்கூட நன்றாகவே இல்லை. ஏன்....உன் எஜமானனுக்கும் உனக்கும் ஏதாவது ரகஸ்யம் உண்டோ?” என்று அவனையே அதட்டுவார்கள்.

ஆனால், தேவதா விசுவாசமுள்ள முத்து முகம் சுளிக்காமல், “ஹூம், ரகஸ்யங்களா? அன்புதானுங்க ரகஸ்யம்; வேறே ஒண்ணுமில்லீங்க” என்பான்.

“அடச் சே! வேலைக்காரப் பயலுக்கு வாயைப் பாரு” என்று ஒரு சிள்ளு போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். இவைகளை யெல்லாம் முத்து லக்ஷியம் செய்தால்தானே!

முத்து ரஞ்சனையும் ரேவதியையும் சமமாகவே எண்ணி வளர்த்தானானாலும், ரஞ்சனுக்கு முத்துவிடத்தில் உள்ள பாசமும், அன்பும், மதிப்பும் ரேவதிக்குக் கடுகளவுகூட இல்லை எனலாம். சதா முத்துவை தூக்கி எறிந்து ஏளனமாகப் பேசுவதும், சித்தி மூலம் தகப்பனாரிடம் கலகம் செய்வதும் அவளுக்குத் தொழிலாக இருந்ததால், தகப்ப

ளரிடம் "என்னப்பா, இது!.... வேலைக்காரனுக்குப் போய் இவ்வளவு இடம் கொடுத்திருக்கிறீர்கள். இது மாதிரி நான் எங்கேயுமே பார்க்கவில்லை. வேலைக்காரர்கள் என்றால் நமக்கு ஒரு படி கீழே இருக்க வேண்டாமா?.... நீ பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டால் அண்ணு தலை மேலேயேத் தூக்கிக் கொண்டு ஆடுவான் போலிருக்கிறது. இதெல்லாம் ஏதோ நாசகாலத்திற்குத்தான். நான் சொன்னால் உங்களுக்கு எங்கே தெரியப் போகிறது? பட்டால் தான் தெரியும்" என்று அசட்டுத்தனமாக உளறுவாள்.



"சரி! சரி..........போ பெரிய நாத்துப் பாட்டி போல் பேச வந்துவிட்டாள். படிக்கப் போ" என்று அவர் இறைவார். இதைத் தற்செயலாகப் பார்த்துக் கொண்டுவரும் ரஞ்சன் சந்தோஷம் அடைவான். இரட்டைப் பிறவிகளாயினும் குணத்தில் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசத்தைக் கண்டு ஷண்முகம் வருத்தப்படுவார்.

சாசுவதமற்ற மனிதர்களின் இதயக் கடலில் நீர்க் குமிழிபோல் உபயோகமற்ற சிந்தனைகள் பொறாமைகள், பொச்சரிப்புகள், எதிர்பார்ப்புகள் முதலிய எண்ணங்கள் அலைஅலையாகச் சுருண்டு பலவித தோற்றங்களையும் உணர்ச்சிகளையும் கொடுக்கும் போது தம்மையே மறக்கின்றார்கள். இதற்கெல்லாம் மேற்பட்டுக் காலக்கூற்றுவனின் ஆட்சி ஒன்று இருக்கிறதென்பதை யாருமே நினைக்கிறதில்லை.

இதை நினைப்பூட்டுவதற்காகவே போலும்....கடவுள் நல்லதும் கெட்டதுமான திடீர் சம்பவங்களை உண்டாக்கி அதிர்ச்சி அடையச் செய்துவிடுகிறார். அமெரிக்காவிற்கு ரஞ்சன் போகப்போகும் ஆனந்தத்தில் எல்லோரும்

திளைத்திருக்கும் சமயத்தில் திடீரென்று [illegible]டைப்பினால் ஷண்முகம் கண்ணை மூடிவிட்டார்! ரஞ்சனுக்கு உலகமே இருண்டு விட்டது போல் அந்தகாரம் சூழ்ந்துவிட்டது! முத்துவின் சப்த நாடியும் அடங்கிப் போயிற்று!



லக்ஷ்மிக்கு கணவனை இழந்த துக்கத்திலும் ரஞ்சனின் அமெரிக்க யாத்திரை இதனால் நின்று விடும் என்ற சந்தோஷம் அவள் இதயத்தில் இடம்பெற்றது. இந்த அதிர்ச்சியினால் ரஞ்சனின் துக்கமும் ஏக்கமும் கரை புரண்டன. அதனால், உடல் நலம் குன்றி நோயாளிபோலா னான். இடம் விட்டு இடம் மாறினால் ரஞ்சனுக்குச் சற்று ஆறுதலாக இருக்கும் என்று அவனுடைய சிநேகிதர் களும், உறவினர்களும் சேர்ந்து முத்துவுடன் ரஞ்சனைக்

கூட்டி '... சோலை' என்ற ஊருக்கு அனுப்பினார்கள். லக்ஷ்மியும், ...தியும் அவர்களுடன் போக மறுத்து விட்டார்கள்.

பிறந்தவுடன் தாயையும், தக்க சமயத்தில் தந்தையையும் பறிகொடுத்துவிட்ட இரண்டு துரதிர்ஷ்டங்கள் போதாமல், சென்ற விடத்தில் அமைதிக்கு பதில், எதிர் பாராத சில சோதனைச் சிக்கல்கள் தோன்றி, ரஞ்சனையும் முத்துவையும் பூகம்பம்போல் ஒரு ஆட்டு ஆட்டி விட்டன. அந்த பயங்கர பூகம்பத்திலிருந்து தப்பிப் பிழைத்து ஊர் வந்து சேர்ந்தார்கள்.

ஏற்கனவே ரஞ்சன் அமெரிக்காவிற்குச் செல்ல திட்ட மிட்டிருந்தபடி அதிர்ஷ்ட தேவதை அவனை அழைக்கவும், பலருடைய ஒத்தாசையாகிய பலம் துணை புரியவும், அரசாங் கத்திலிருந்து சனிக்கிழமை கிளம்பும்படியாக 'ஆர்டர்' வந்து விட்டது.

தந்தை இறந்துவிட்டதால் நமக்குக் கிடைத்த இந்த பாக்கியம் கைநழுவிப் போய்விடுமோ என்று ஏங்கிக் கொண்டிருந்த ரஞ்சனுக்கு, இந்தக் கடிதம், தன் பெற்றோர்களே தெய்வமாக இருந்து அனுப்பியதுபோல் தோன்றியது.

(இது பூர்வகதை—இங்கிருந்து கதை தொடங்குகிறது)

## அத்தியாயம் 2

### வேட்டை முடிந்தது, விமானம் பறந்தது

ரஞ்சன் கடிதத்தைப் பார்த்தவுடனே அளவில்லாத சந்தோஷத்துடன் "முத்து! முத்து!" என்றழைத்தான். அவன் குரலில் அன்பும் பரிவும் நாத வெள்ளமாகச் சப்தித்தன.

அடுத்த நிமிஷமே முத்து ஆவலுடன் ஓடி வந்து, "என்னங்க எசமான்! ஏதாச்சும் வேலை இருக்குங்களா?" என்று பரிவுடன் கேட்டான்.

*ரஞ்சன்:*—ஏதாச்சும் வேலையா! அபாரமா வேலையிருக்கு, முத்து. இதோ பார் கடிதம். என் பெற்றோர்களே தெய்வமாக இருந்து அமெரிக்காவிற்குச் செல்ல உத்திரவு அனுப்பிவிட்டார்கள். அடுத்த சனிக்கிழமை கிளம்பவேண்டும், முத்து!

இதைக் கேட்டவுடனே முத்து ஏ... சாம்ராஜ்யத்தையே தனக்குப் பட்டம் கட்டிவிட்ட...ன்று சந்தோஷத்தை அடைந்து சிறு குழந்தைபோல் கையைத் தட்டிக் கொண்டு குதிக்கிறான். ரஞ்சன் திடுக்கிடும்படி அவனைத் தூக்கிக் கொண்டு தட்டாமாலை சுத்தியவாறு—

"எசமான்! எசமான்! அம்ருக்காவுக்குப் போயி நல்ல படிச்சுபுட்டு வெள்ளைக்கார தொரை மாதிரி ஜம்னு வந்து இறங்குவீங்க .... இல்லையா .... அப்போ இந்த கயிதை முத்து ஒடியாந்து எங்க ராசாவெ கட்டிக்கும் என்று சொல்லும் பொழுது ஆனந்தமிகுதியால் கண்ணில் நீர் பெருகி, நா தழதழத்தது. தன்னிரு கைகளாலும் ரஞ்சனின் கன்னத்தை வழித்து 'கட கட'வென்று சுடுக்கினான்.

**ரஞ்சன்:**—முத்தூ! இந்த சந்தோஷத்தைப் பங்கிட்டுக்க அப்பா இல்லையேன்னு மிகவும் வருத்தமாயிருக்கிறது. உன்னையும் என்கூட அமெரிக்காவிற்கு அழைத்துக் கொண்டு போகலாம்னு நினைக்கிறேன், வருகிறாயா?

**முத்து :**— எசமான்! இதுக்கு நான் என்ன பதில் சொல்றதுன்னே தெரியல்லே. ஒரு ஆள் போய் வரதுன்னா ஆயிரக்கணக்கிலே ரூபா செலவாகுமாமே!....

**ரஞ்சன் :**— அதைப் பற்றி உனக்கென்ன கவலை! எனக்கு நீ இருந்தால் சந்தோஷமாக இருக்கும்; என்ன சொல்கிறாய்?

**முத்து :**—எசமான்! இதெப்பத்தி அப்பாலே பேசிக்கலாம். இந்த சந்தோஷச் சமாச்சாரத்தெ அல்லாருக்கும் சொல்லிபுட்டு வந்துட்ரேன்" என்று குதி போட்டுக் கொண்டு ஓடினான்.

மேலும் இரண்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. ரஞ்சன் அமெரிக்காவுக்குச் செல்லும் விஷயம் எங்கும் காற்று போல் பரவியது. பல சிநேகிதர்களும், உறவினர்களும் அவனை விருந்துக்கு அழைக்கப் போட்டிபோட ஆரம்பித்தார்கள். அந்தப் போட்டியில் ரஞ்சனைத் தங்களுக்கு மருமகனாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் மின்னல் போல் பிரகாசித்தது. அதீத நாகரீகத்தில் மூழ்கியுள்ள சில சிநேகிதர்கள்,

"மிஸ்டர் ரஞ்சன்! என் பெண் ஹேமலதாவைத் தங்களுக்காகவே நான் பெற்று வளர்த்து வருகிறேன். நான் பழயகாலத்துப் பயந்தாங் கொள்ளி கட்டுப்பெட்டியல்ல

என்பது உ[illegible]குத் தெரியும். ஹேமலதா B. A. Hons. பாஸ் செ[illegible]கிருள். அதுவும் உங்களுக்குத் தெரியும். சங்கீதத்தில் அநேக தங்கப்பதக்கங்கள் வாங்கியிருக்கிருள். அதுவும் உங்களுக்குத் தெரியும். டென்னிஸ், பாட்மின்டன், பிங்பாங் எல்லாவற்றிலும் கோப்பைகள் வாங்கியிருக்கிருள்; அதுவும் உங்களுக்குத் தெரியும்.''

**ரஞ்சன் :—** (தனக்குள்) இது என்ன 'உங்களுக்குத் தெரியும்?' புராணம்; இதற்கு முடிவோ, முற்றுப் புள்ளியோ ஒன்றுமே காணவில்லையே....

**வந்தவர் :—**'' ஸார்! அதுமட்டுமா. நீச்சல் போட்டியில் மெடல் வாங்கி யிருக்கிருள். அதுவும் உங்களுக்குத் தெரியும். 'டொமஸ்டிக் ஸயன்ஸ்' பிரகாரம் ரொம்ப ருசியாய் சமயலும் செய்வாள். இதெல்லாம் எதற்காகச் சொல்ல வந்தேன் என்ருல்''....

**ரஞ்சன் :—**'' அதுகூட எனக்குத் தெரியும் ஸார்''

**வந்தவர் :—**ஹா...ஹா...தெரியுமா?....என்று அலறிய வாறு கேட்டார்.

**ரஞ்சன் :—**ஹூம்.... நன்ருகத் தெரியும். உங்கள் பெண்ணை எனக்கு கல்யாணம் செய்து கொடுப்பதற்கு வலை வீசுகிறீர்கள். அவ்வளவுதானே. அதுவும் எனக்குத் தெரியும். இன்னும் மிஞ்சிப் போனல் அமெரிக்காவிற்கு அழைத்துப் போங்கள்.... என்றும் சொல்லப் போகின்றீர்கள்; அதுவும் எனக்குத் தெரியும்.

**வந்தவர் :—** ஸார்! ஏதோ... என்னைப்பற்றி விளையாட்டுத்தனமாக நினைத்துப் பேசுகிறீர்கள்.

**ரஞ்சன் :—** ஸார்! மன்னிக்க வேண்டும். நான் விளையாட்டுப் பிள்ளையல்ல கொஞ்சம் பொறுப்பு வாய்ந்தவன் என்றுதான் நினைக்கிறேன். நீங்கள் சொல்லிய ரகத்தில் சேர்ந்த எந்தப் பெண்ணையும் நான் மணக்கத் தயாராக இல்லை. நான் நாளை மறுநாள் விடியற்காலை செல்ல வேண்டும். எனக்கு அதிக வேலை இருக்கிறது. கோபிக்கக் கூடாது.'' என்று சற்று கடுமையாகவே கூறினன்.

அதே சமயம் முத்து அங்கு வந்தான். அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியாமல் வந்த பெரிய மனிதர் புறப்பட்டுப் போய்விட்டார். முத்து தயங்கி நிற்பதைக் கண்ட ரஞ்சன், ''முத்து! நீ இந்த மாதிரி வருத்தப்படக் கூடாது. 4 வருடம் கொட்டைப்பாக்காய் உருண்டு போய் விடுகிறது. நான் வந்து விடுகிறேன். பூர்ண கர்பிணியாக உள்ள உன் மனைவியை தன்னந் தனியாக விட்டுவிட்டு

உன்னே அழைத்துப் போவது சரியில்லை ... உன்னே விட்டுப் போகிறேன். அதோடு ஆழமாக ... சனை செய்ததில் நீ இங்கு இருந்தால்தான் ரேவதியை நன்ருகப் பார்த்துக் கொள்வாய் என்ற நம்பிக்கை. நீயும் உன் மனேவியும்தான் ரேவதியை கவனித்துக் கொள்ளவேண்டும்''.... என்று சொல்லும்போது, வழக்கமாக வரும் குருட்டுப் பிச்சைக்காரன்.

"ஜயமுண்டு பயமில்லை மனமே" என்று அமரகவி பாரதியாரின் பாட்டைப் பாடிக் கொண்டு வந்தான்.

இந்த இன்னிசையைக் கேட்ட ரஞ்சனின் உடலெல்லாம் சிலிர்த்தது. உடனே எழுந்து வாசலுக்கு வந்தான். 'ஜயமுண்டு பயமில்லை' என்று தனக்கு வாழ்த்து கூறுவது போல பாடிய பிச்சைக்காரனே நோக்கி, "இந்தாப்பா 5 ரூபாய்கள் என்று அவன் குவளையில் நாணயமாகப் போட்டான்."

**குருடன் :—** "ஹா! அஞ்சு ரூபாய்களா! ஐயா நீங்க மவராசனு வாழணும்க. நான் எப்போ வந்தாலும் உங்க அப்பாரு நாலணு கொடுப்பாரு. நீங்க தர்ம ராஜா. நீங்க அஞசு ரூபா கொடுத்தீங்க. இந்த கெழவன் இன்னும் ஒரு வாரத்துக்குப் பிச்சையே எடுக்க மாட்டான்" என்று வாழ்த்தினுன்.

அப்போது, உள்ளிருந்து வந்த முத்து,

"பெரியவரே! ஒரு விஷயம் தெரியுமா? எங்க சின்ன ஐயா, அம்ருக்கா போபோருரு. அங்கே போயி ரொம்ப படிச்சுபுட்டு பெரிய வெள்ளக்கார தொரை மாதிரி வரப் போருரு. நல்லா க்ஷேமமா, சொகமா திரும்பி வரணும்னு நீ சாமியை வேண்டிக்க" என்று குதூகலத்துடன் சொன்னுன்.

இதைக் கேட்ட அந்தகன் சிரித்துக்கொண்டே, "சாமியெல்லாம் வேண்டிக்கலாம்பா. ஆனு........ரொம்ப பேரு சீமை, சீமை எங்கெங்கையோ போறவங்க தொரை மாதிரி திரும்பி வரச்செல்ல, கூட தொரசானியையும் இட்டுகினு வந்துட்ராங்க! குடும்பமே பாழாய் போயிட்ரது".... என்று முடிப்பதற்குள், முத்து ஆத்திரத்துடன், "தே! கண்ட மைனர்களெப் போல எங்க ஐயாவெ நெனச்சுட்டையா? அவரு கால்லே ஒட்டின தூசி கூட அப்பிடி பண்ணுது. அவரு கூட பிறந்த தங்கச்சி இந்த காலத்துப் படிச்ச பொங்களெப் போல, அப்பிடி இருக்குது. அதுக்கே அவரு திட்டு திட்டுன்னு திட்ருரு. அப்படிபட்ட எங்க ராசாவா மாறி பூடுவாரு?.... ஹூஹூம்... அவரெப்பத்தி

ஒனக்கெ[illegible]ரியும்?" என்று சற்று கடுகடுப்பாகவே சொன்னன்.

குருட்டன் :—" அப்பா! கோச்சிக்காதேப்பா. இந்த குருடனை நீ என்னவோ சாமான்னிய பிறவிக் குருடன்னு நெனச்சிகிட்டுப் பேசறே. தலைவிதியினலே இப்போ நான் குருடனு இருக்கேனே தவிர இந்த உலகத்தை நான் நன்னு கண்ணுலே பாத்தவன் தம்பி! பாரிஜாதபுரம் மிராசுதார் முருகேச முதலியாரைப் பத்தித் தெரியாதவங்க இருக்கமாட்டாங்க; ஒரு காலத்துலே அவருகிட்டே நான் காரியஸ்தனு இருந்தேன். அவர் சின்ன மாமன் செல்லத் துரை டாக்டர் படிப்புக்காவ அம்ருக்கா போயி அங்கே எவளெயோ கண்ணலம் கட்டிகினு அங்கேயே தங்கிபூட் டாரு. குடும்பம் எப்படி பூடிச்சு தெரியுமா? அதனலே தான் சொல்றேன். கடவுள் கிருபேலே சொகம்மா நல்லா வந்து சேரணும்" என்று சொல்லியவாறு " ஜயமுண்டு பய மில்லே" என்று பாடிக்கொண்டே சென்ருன்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே முத்துவுக்கு சிறு குழப்பம் உண்டாகிவிட்டது. மனைவி கர்ப்பிணியாக இருந்தால் என்ன? யாராவது பார்த்துக்கொள்கிருர்கள். நாம் கூட போய்விடலாமா?...என்று சிந்தித்தபடியே தன் குடிசைக்குச் சென்று தலையில் கை வைத்தவாறு உட் கார்ந்தான். தண்ணீர் மொண்டு கொண்டு தள்ளாமை யுடன் வரும் வள்ளி, 'என்னங்க ஒடம்புக்கு! ஏதோ மாதிரி இருக்கீங்களே' என்று பரிவுடன் கேட்டாள்.

முத்து:—ஒடம்புக்கு ஒண்ணுமில்லே வள்ளி. ஒன்னே இந்த நெலேலே வுட்டுட்டு போகக் கூடாதுன்னும், ரேவதியை நீதான் பாத்துகிணுன்னும் என்னை அம்ருக்கா வுக்கு அழெச்சிண்டு போகாதே சின்னையா நிப்பாட்டிட் டாரு. அதுதான் வருத்தமாயிருக்கு. இந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் வேறே, அம்ருக்காவுக்குப் போனு எல் லாரும் கெட்டுப்போய்தான் வருவாங்கன்னு சொல்லிபுட்டு போருன். அது வேறே வேதனையாயிருக்குது."

வள்ளி :—ஐயோ, சாமி! இதுக்கா நீ இம்புட்டு வெசனப் பட்றே. நெருப்பை எங்காச்சும் ஈ மொய்க்குமா? ஐயாவைப் பத்தி நீ சந்தேகமே படவேண்டாம்.......அதோ பாரு தோட்டத்திலே ரேவதியம்மா எவன்கிட்டையோ பேசிக்கிட்டு நிக்கிற வவுத்தெரிச்சலெ. ஐயா சொல்ற மாதிரி நீ இங்கே இருந்தாதான் ரேவதியம்மா கொஞ்சத் துக்குக் கொஞ்சம் அடங்கி இருக்கும். நீ கவலைப் படாதே. கடைக்குப் போயி அரிசி கொஞ்சம் வாங்கிக் குடுத்துட்டு போ. கொயந்தைக்கு ஜொரம் காயுது. தரும ஆஸ்பத்

திரிலேருந்து கொஞ்சம் கசாயப் [illegible]வாங்கியா" என்றாள்.

முத்து துண்டை உதறித் தோள்மேல் போட்டுக் கொண்டு வெளியே சென்றான்.

ஃ ஃ ஃ

முத்து, பாலை எடுத்துக்கொண்டு ரஞ்சன் அறையில் சென்று மேஜைமேல் டம்ளரை வைத்துவிட்டு, அன்பும், ஆனந்தமும் பொங்க, "சின்னையா, சின்னையா" என்று குழைவுடன் கூப்பிட்டு நின்றான்.

ஏதோ முக்கியமான விஷயம் படித்துக் கொண்டிருந்த ரஞ்சன், இந்தக் குரலைக் கேட்டதும் நிமிர்ந்து பார்த்து, "என்ன முத்து! என்ன சமாசாரம், ஏன் ஒரு மாதிரி தடுமாறிப் பேசுகிறாய்? வா இப்படி உட்கார்'' என்றான்.

முத்து :—''இருக்கட்டும் எசமான்! யாராச்சும் வந்துடுவாங்க. கொஞ்ச நேரமிந்தி கடைக்கும், தரும ஆஸ்பத்திரிக்கும் போயிருந்தேன். அந்த ஆஸ்பத்திரிக்கு பக்கத்துலே மைதானத்துலே ஒரு அஞ்சாறு பேரு குந்திக்கிட்டு ஏதோ கதை படிச்சுக்கிட்டு இருந்தாங்க....''

ரஞ்சன்:—''ஓஹோ! நீ போன காரியத்தை மறந்து போய், நீயும் உட்கார்ந்து கதை கேட்டுண்டு இருந்தயா? அப்படி சுவாரஸ்யமான கதை என்னதுப்பா?

முத்து :—ரொம்ப நல்லா இருந்துச்சுங்கோ. நம்ப மவாத்துமா காந்தி கதைங்களாம். அவரு கூட சீமைக்கு போனாரும். அவரு அம்மா இட்லிபாய்.......

ரஞ்சன் :— என்ன என்ன இட்லிபாயா? ஒரக்கச் சொல்லாதே. யாரேனும் சண்டைக்கு வந்துட போறா. உலகம் போற்றும் உத்தம காந்தியைப் பெற்ற புண்ணியவதி புத்லிபாய், ஆமாம் அதுக்கென்ன?

முத்து:—'எனக்கென்னங்க தெரியும். அவங்க படிக்கச்சலே என் காதுலே இட்லி இட்லி என்று விழுந்தது.

ரஞ்சன்:—எந்த பிரகஸ்பதி அப்படி படித்தானோ! சரி, சரி....ஓஹோ....முத்து! புரிஞ்சுண்டுட்டேன். நீ சொல்ல வந்த விஷயம் எனக்கு ஜோஸ்யத்திலே தெரிந்து விட்டது. நான் சொல்லி விடட்டுமா!....

முத்து:—'அது என்ன ஜோஸ்யம் எசமான்!'

ரஞ்சன்:-'அதுவா? மகாத்மா காந்தி சீமைக்குப்போனார். அப்போது அவர் தாயார் நீ சொன்னையே இட்லி பாய்னு, அந்த புத்லிபாய் அவர்கிட்டே துர்சகவாசம்


பண்ணாதே, [illegible]காதே...இது போன்ற புத்திமதிகளைச் சொல்லி சத்தியம் வாங்கிக் கொண்டாள். அதுதானே எனக்குச் சொல்ல வந்தாய். சரிதானே முத்து; என் ஜோஸ்யம் சரிதானே."

முத்துவுக்கு எல்லை மீறிய ஆச்சரியமும், ஆனந்தமும் பொங்கின. 'எசமான்! அந்தக் கதையை நீங்களும் படிச்



சிருக்கங்களா?' அத்ததான் சொல்ல ... ங்க. உங்க ஜோஸ்யம் நூத்துக்கு நூறு உளுமெங் ...

ரஞ்சன் :— (முத்துவின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டு) 'முத்தூ! எனக்கு புத்தி சொல்லக் கூடிய தகுந்த யோக்யதையும், பொறுப்பும் உன்னைத் தவிர வேறு யாருக்கு இருக்கிறது. என் தாய், தந்தை, என் வாழ்க்கையின் சகல லக்ஷயமும் நீ அல்லவா முத்தூ? புத்லிபாயிக்கு காந்தி சத்தியம்செய்து கொடுத்தது போல, உனக்கு நான் சத்தியம் செய்து கொடுக்கிறேன். நான் இந்த நிமிஷம்இருக்கும் நிலையிலிருந்து கடுகளவும் மாறாமலும், கெட்ட பழக்கங்கள் எதுவும் என்னிடம் அணுகாமலும் கடவுள்மீது ஆணையாக நடந்து கொள்கிறேன். த்ருப்தி தானே.'—என்று கொஞ்சும்பாவனையில் கேட்டான்.



முத்து:—எசமான்! கையை விடுங்கோ. யாரோ இரண்டு பொண்கள் வந்து கதவுகிட்டே நிக்குதுங்க....என்று முடிப்பதற்குள், 'ஹல்லோ! மிஸ்டர் ரஞ்சன்' என்று சொல்லிக் கொண்டே இரண்டு கட்டழகிகள் அருகில் வந்து தாங்களாகவே ஸோபாவில் அமர்ந்தார்கள். இதைக் கண்ட முத்து உதட்டைப் பிதுக்கி முகத்

தை அஷ் ...ல் செய்து கொண்டு சுவரோரமாக நின்றான்.

ஒருத்தி:—ஸார்! எக்ஸ்க்யூஸ்பண்ணனும்.வேலைக்காரன் கையைப் பிடித்துக்கொண்டு நீங்க பேசினது எங்களுக்குப் பிடிக்கவே இல்லை, ஸார்!

ரஞ்சன்:—ரொம்பசந்தோஷம்.அவரவர்ளுக்குப் பிடிக்காத விஷயங்களைச் சொல்வதற்குப் பூரண உரிமை உண்டல்லவா. உரிமையோடு சொல்வதில் குற்றமென்ன இருக்கிறது. **'கூந்தல் கோடி ஹனம் காக்கும்'** என்பது பெண்களுக்குச் சொல்லும் ஒருபழமொழி. தாங்கள் கூந்தலை இப்படி அரை மொட்டையாக்கி இருப்பது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை—என்று சொல்வதைக் கேட்ட முத்து, சிரிப்பை அடக்கமுடியாமல், 'களுக்' என்று சிரித்துக்கொண்டே வெளியே போய்விட்டான்.

பெண்கள் ஒருவர் முகத்தை ஒருவர் சுடசுடப் பார்த்துக் கொண்டார்கள்.

ரஞ்சன்:—சரி! எனக்கு ரொம்ப வேலையிருக்கிறது. நீங்கள் வந்த காரியம் என்ன? நீங்கள் யாரென்றுகூட எனக்குத் தெரியவில்லையே.

மற்றொருத்தி:—ஓ! தெரியாததினாலேதான் நீங்கள் ஏளனமாகப் பேசிவிட்டீர்கள். 'டஸன் மேடர்'. நாங்கள் ரேவதியின் சிநேகிதிகள். தாங்கள் அமெரிக்கா செல்வதைக் கேள்விப் பட்டோம். எங்கப்பாவிற்கு இரண்டு நாட்களாக உடம்பு சரியாக இல்லை. இன்று தங்களை விருந்துக்கு வரும்படியாக அப்பா அழைத்துவிட்டு வரச் சொன்னார். ரேவதியையும் அழைத்துக் கொண்டு கட்டாயம் இன்றிரவு வரவேண்டும்.

ரஞ்சன்:—மன்னிக்க வேணும். என்னுடைய லக்ஷ்யம் நிறைவேறுவதற்காக நான் அமெரிக்கா செல்கிறேனே அன்றி எனக்கு டீ பார்ட்டி, டின்னர், பிரிவு உபசாரம், மாலை மரியாதை, கூட்டம் இவைகளெல்லாம் கட்டோடு பிடிக்காது. இப்படி நீங்கள் வந்து என்னோடு பேசுவதுகூட எனக்குப் பிடிக்கவில்லை. எனக்கு அதிக வேலை இருக்கிறது; போய் வாருங்கள்—என்று கூறிக் கொண்டே எழுந்து வெளியே போய்விட்டான்.

183202

[40-ம் பக்கத் தொடர்ச்[illegible]

“ஹி...ஹி...ஹி. நம்ப பிள்ளை அழகு[illegible] சொல்ல வந்தேன். அது தவறிப் போச்சு. அதுக்கு[illegible] ஒரு பிடி பாக்கைப் போட்டு கடிக்கிற மாதிரி கடிக்கிறயே, இதோ பாரு—எந்த பொண்ணு ஜாதகமும் இந்த அஸமஞ்சத்துக்குச் சரிப் படவே இல்லை. இந்த ஜாதகத்தை ஜோஸ்யன் கையிலே எடுக்கும்போதே—ஐய்யய்ய—ரொம்ப மட்ட ஜாதகம்னு கீழே போட்டுடுறான். இப்படி இருந்தா யாரு பெண்ணைக் கொடுப்பான்றே.”

“இதோ பாருங்கோ...சில பணக்காரா, பெண் ஜாதகத்தையோ, பிள்ளை ஜாதகத்தையோ நல்லா இல்லாதபோனா மாத்தி நல்ல யோக ஜாதகமாக்கிட்ருளாம். பணக்காராள்ளாமே இப்படி செய்யறபோது நாமும் குப்பா சாஸ்திரிகளைக் கூப்பிட்டு இப்படி செய்தா என்ன? அப்பறம் பொண்ணு சீக்கிரமா குதுந்துடும். கோடிமாத்து கோமளம் பெண்ணுக்கும் மாடிமாத்து மங்களம் பிள்ளைக்கும் கூட அப்படிதான் மாத்தி எழுதினாளாம். என்ன சொல்றேள?”

“உன் பிள்ளை புத்தி போலதான் உன் புத்தியும் இருக்கு. என்னதான் கர்ணம் போட்டு மாத்தி எழுதினாலும், பகவான் போட்ட ‘தலையெழுத்து மாறுமா?” என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது அவர் பிள்ளை வேங்கிட்டு கூவிக்கொண்டே ஓடி வந்தான்.

“அப்பா! முடிச்சுண்டு வந்துட்டேன்.”

“என்னத்தைடா முடிச்சுண்டு வந்துட்டே. என்ன சமாசாரம்! எங்கேனா பெண் பாத்து முடிச்சுண்டு வந்துட்டையானா,”

“ஹி...ஹி...ஹி...ஹி...அதெல்லாம் நான் ஏம்பா பாத்து முடிக்கணும்? நம்ப சுப்புணி மாமா நமக்கு 250 ரூ. கடன் குடுக்கணும்னு சொன்னையேப்பா. கல்யாணத்துக்குன்னு வாங்கிண்டு வரச் சொன்னியேப்பா.”

“என்னடா! சமத்தா வாங்கிண்டு வந்துட்டையா?”

“ஹூம். நான் பணமாவா வாங்கிண்டு வருவேன். சுப்புணி மாமாகிட்டே போய் கல்யாணத்துக்கு 250 ரூ. வாங்கிண்டு வரச் சொன்னான்னு சொன்னேன். அதுக்கு அந்த மாமா, “போடா போ, உனக்குக் கல்யாணத்துக்கு இந்தப் பிச்சைக் காசு எதுக்கு. உன் அழகுக்கும், உன் அந்தஸ்துக்கும் 5000 ரூ. வரதக்ஷணைக் கொடுப்பாடா. நான் அதிலேயே 2000 ரூ. கடன் வாங்கிக்கணும்னு பாக்கறேன். அதனாலே அந்த 250 ரூபாய்க்கு எங்கிட்டே இரண்டு காளை இருக்கு அதை ஓட்டிண்டு போடா” அப்பிடின்னார். அதோ பாருப்பா வாசல்லே இருக்கு.”

(இருவரும் வெளியே வந்து வாசல்லே பார்த்துவிட்டு)

“அடக் கண்றாவியே. கிழக் காளையாச்சேடா இது.”

“அட போப்பா நீ ஒண்ணு. கிழக் காளையாம். தலை நரைச்சுதா. தாடை ஒட்டித்தா. பல்லு விழுந்துதா. கூன் விழுந்திருக்கா. ஜம்முனு நிக்குது. ஹி...ஹி...ஹி...பா...பா.”

“ஐயோ தலையெழுத்தே”

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணை
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

**ஜகன்மோகினி காரியாலயம்,**
26. தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

**வை. மு. கோ. நாவல்கள்**

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
மலர்ந்த இதழ்
ரூ. 2-4
ஞானதீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்விக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
ஞானக் குன்று

ரூ. 1-12
அநாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்

ரூ. 1-2
அபாரதி
ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா 12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை

வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

**வை. மு. ஸ்ரீ.**
உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனல் 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

**வை.மு. பத்மினி**
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

**சுத்தானந்த பாரதி**
காந்தி கீர்த்தனம் 3-8

**ப்ர.ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி**
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமஉரை 1-0
அபூர்வ ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5